Registered as a Newspaper

குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

பெண்மணிகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீன புடவை தினுசுகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

மலை:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி 9 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 28 (25-07 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-29

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு தயார்

# இரு ஒப்பந்தங்கள் புதனன்று கொழும்பில் கைச்சாத்தாகும்

## 1. இலங்கை-இந்தியா 2. இலங்கை-தமிழர்தரப்பு கைச்சாத்திட ராஜீவ் புதன்கிழமை வருகிறார்

### போராளிகளுக்கு மன்னிப்பு; சிறையில் இருப்போர் விடுதலை ஆக. 18 இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இனப்பிரச்சினைக்கான தீர்வு தயார். தீர்வு சம்பந்தமாக அனேகமாக இரண்டு ஒப்பந்தங்கள் எதிர்வரும் புதன்கிழமை கொழும்பில் கைச்சாத்திடப்படும்

ஒப்பந்தங்களில் ஒன்றில் இலங்கை அரசு தரப்பிலும் இந்திய அரசு தரப்பிலும் கைச்சாத்திடப்படும்

அடுத்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசும் தமிழர் அமைப்புக்களும் கைச்சாத்திடும்.

முதலாவது ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி புதன்கிழமை கொழும்பு வரலாம்.

இதே வேளை தீர்வுக்கான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையில் இருந்து வெளிநாட்டுக் கூலிப்படைகளை வெளியேற்ற இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போர் நிறுத்தம் ஒன்றை உடனடியாக அமுல்படுத்த அடுத்த ஒப்பந்தம் வகைசெய்கிறது.

தமிழ்ப் போராளிகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கவும், சிறையில் உள்ள சகல தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் ஒப்பந்தம் வகை செய்கிறது.

இதே வேளை தீர்வு சம்பந்தமான இலங்கை அரசு—தமிழர் தரப்பு ஒப்பந்தம் அடுத்தமாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு பி. பி. ஸி, மற்றும் ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தகவல்களை வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள தீவிரவாத முகாம்களை மூடுவதற்குத் தயார் என்று இந்தியா கூறியுள்ளது என்றும் -

அதற்குப் பதிலாக தமிழர் போராட்டத்தை நசுக்க பயன் படுத்தப்படும் வெளிநாட்டுக் கூலிப்படைகளை வெளியேற்ற இலங்கை அரசு சம்மதித்து இருப்பதாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. செய்தியளர் திரு. மைக்கல் கூல்றிட்ஜ் அறிவித்திருக்கிறார்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் டிக்ஸிற் வெள்ளி இரவு பேசுவார் என்றும் சனி மாலை கொழும்பு திரும்புவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இதே வேளை இலங்கை அரசுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட பிரதமர் காந்தி கொழும்பு செல்வார் என்ற செய்தி குறித்து கருத்துத் தெரிவிக்க புதுடில்லி வெளிநாட்டமைச்சு மறுத்துவிட்டது. (அ-எ)



இந்திய விமானப்படை ஹெலிக்கொப்டர்களில் ஏறுவதற்காக புலிகள் தலைவர் பிரபாவை இந்திய தூதரக பாதுகாப்பு அதிகாரி பி. கே. குப்தா கையைப் பிடித்து அழைத்துச் செல்லும் காட்சி. (உ)

## அமிர் - மேனன் நேற்றுப்பேச்சு

புதுடில்லி, ஜூலை 25

இந்திய வெளியுறவுச் செயலாளர் கே. பி.எஸ் மேனன், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கத்துடன் நேற்றுப் பேச்சுக்கள் நடத்தினர்.

ஈரோஸ் இயக்கத் தலைவர்களுடனும் திரு. மேனன் தொடர்பு கொண்டு இருக்கின்றார்.

இப்படி புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## கருத்துக் கூற மறுப்பு

சென்னை, ஜூலை 25

பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்த பின்னர் தான் சமரசத் திட்டம் பற்றிய பேச்சுக் குறித்துக் கருத்துக் கூற முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ-எ)

## அமைதி!

நேற்று இந்திய ஹெலிக்கொப்டர்கள் வந்து சென்ற பின்னர் கோட்டை முகாம் பகுதியில் அமைதி நிலவியது.

இந்தச் செய்தி எழுதப்படும் வரை ஓரிரு வெடிச் சத்தங்களைத் தவிர, வேறு எந்த ஷெல்லடியுமோ நடக்கவில்லை. (உ-10)

## கருத்துக் கலசம்

மயூரா

### நம்பிக்கை

நம்பினோர் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு. மனித வாழ்க்கையே நம்பிக்கையில் தான் நகர்கிறது. ஒருவனை மற்றவன் நம்பாத தன்மை படர்ந்தால் மனித சமுதாயமே இயங்குவது கஷ்டமாகிவிடும்.

ஒருவர்மீது மற்றவர் நம்பிக்கை வைத்து நடப்பதால் தான் பல காரியங்கள் நடக்கின்றன. ஒருவர் எவரையுமே நம்பாதவராக இருப்பின் அவரால் எதையுமே உருப்படியாகச் செய்ய முடியாது. அவர் வாழ்க்கை தோல்வி அடைவது நிச்சயம்.

எல்லோர் மீதும் நம்பிக்கை வைப்பது என்பதும் துன்பத்தில் முடியும். ஏனெனில் தம்மீது வைக்கப்படும் நம்பிக்கைக்கு விரோதமாக நடப்போரும் இருக்கிறார்கள். அவர்கள் மீது நம்பிக்கை வைக்கக்கூடாது.

ஒருவன் தனது வாழ்க்கையில் யார் யார் மீது நம்பிக்கை வைக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்வதில் தான் அவனது வெற்றி தங்கியிருக்கிறது.

இப்போது ஒவ்வாதது நடப்பினும், துன்பமே சூழினும், அல்லலே ஓங்கினும் நல்ல காலம் ஒன்று வரும், வளமான வாழ்வு கிடைக்கும் என்று நம்புபவனுக்கு அப்படியே ஆகும். நடந்தது நடந்ததாகட்டும், நடப்பது நல்லதாகும் என நம்புபவனுக்கும் அப்படியே ஆகும்.

இந்த நம்பிக்கை அநேகமாகத் தெய்வ நம்பிக்கையில் இருந்து உதிப்பது எனலாம் அதனால் தான் கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்கள் என்று பெரியோர்கள் கூறிப் போந்தனர்.

தனி வாழ்க்கையில் எப்படியோ, சமூக வாழ்க்கையிலும் நம்பிக்கை தான் சமுதாய வெற்றியைப் பின்னுகிறது.

அரசியலிலும் நம்பிக்கைக்குப் பெரும் பங்குண்டு. பல திட்டங்கள், தியாகங்கள் தோல்வி கண்டாலும், நம்பிக்கையுடன் தனது இலட்சியத்தை நோக்கி மன உறுதியுடன் செயற்படுபவன் வெற்றியே காண்பான்.

மொத்தத்தில் தனி மனித, சமூக, அரசியல், சமய வாழ்க்கையில் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை வேண்டும். எல்லாம் நன்மைக்கே என்ற நம்பிக்கை எப்போதும் நன்மையே தரும்.

### சுபநேரம்

25-07-1987
சனிக்கிழமை

சுபநேரம்:-
3. 02 முதல் 4.32 வரை
ராகுகாலம்:-
9.02 முதல் 10.32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஆடி அமாவாசை விரதம்

# தமிழீழமே தீர்வு

## பிரபா அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

தற்போது பேசப்பட்டு வரும் இடைக்காலத் தீர்வுகள் எமது பிரச்சினைகளின் தீர்வாக அமையாது. எனவே தமிழ் மக்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்றேன். அந்தத் தீர்வு தமிழீழம் என்றே நான் நம்புகின்றேன்.

— தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று இந்தியா புறப்பட முன்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று நாம் தமிழீழ வரலாற்றில் ஓர் முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம். இன்று இடம்பெறும் இவ் அழைப்பு வரலாற்றில் மிக மிக முக்கியமானது.

எமது போராட்டத்தில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது எமக்கும் நன்கு தெரியும். நாம் அனைத்தையும் உணர்ந்து ராஜதந்திர ரீதியிலேயே இன்று செயல்பட்டு வருகிறோம்.

இன்று நான் உங்களின் பிரதிநிதியாக உங்களிடமிருந்து தமிழ் மக்கள் அனைவரினதும் மனங்களையும் சுமந்துகொண்டு விடைபெறுகிறேன்.

சிங்கள அரசுகளை நம்பி பழைய வரலாறுகளால் தமிழீழ மக்கள் 30 வருடமாக ஏமாந்திருப்பது உலகறிந்த விடயம். இன்று தமிழ் மக்கள் தம் இலட்சியத்தை வென்றெடுக்கும் ஓர் தலைமையை பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகிறேன். நீங்கள் எனக்களித்திடும் கடமையை நான் நேர்மையாகவும், உண்மையாகவும், உறுதியுடனும் செய்வேன் என நம்புகிறேன்.

— இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (உ)

## யாழ் நகருக்கு வவுனியா தேரர் நாளை வருவார்

வவுனியா, ஜூலை 25

வவுனியா விகாராதிபதி வண. சியம்பலகஸ் வெவ விமலசார தேரர் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ் வருகிறார்.

விடுதலைப் புலிகளினால் காவலில் வைக்கப்பட்டு உள்ள 12 படையினரின் உறவினர்களுடனும் வேறு சிலருடனும் யாழ் வரும் தேரர், சிறைக்கைதிகளைப் பார்வையிடுவதுடன் புலிகளின் பிரமுகர்களையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-164)

## எம். ஜி. ஆர் - பிரபா சந்தித்துப் பேச்சு

சென்னை, ஜூலை 25

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனை திரு. பிரபாகரன் நேற்று சந்தித்துப் பேசினார்.

அரை மணித்தியாலம் வரை இப்பேச்சுக்கள் நீடித்தன.

சந்திப்பு முதலமைச்சரின் இராமாவரம் தோட்ட இல்லத்தில் நடைபெற்றது (உ-எ)

## தமிழகஎம்.பீக்களுடன் ராஜீவ் ஆலோசிப்பார்

புதுடில்லி ஜூலை 25

இலங்கை இனப் பிரச்சினை குறித்து தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் 24 பேருடன் பிரதமர் ராஜீவ் காந்தி விவாதிக்கஇருக்கின்றார்.

24 எம். பிக்களும் நேற்று திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்து தங்கள் பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொண்டனர்.

அப்போதே பிரதமர் காந்தி இத்தகவலை அவர்களிடம் வெளியிட்டார்.

## பச்சைநிற ஹெலியில் வந்த சீருடையினர்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நேற்று வந்த இரு இந்திய விமானப் படை ஹெலிகளும்கரும் பச்சை நிறத்திலானவை. அந்த ஹெலிகளில் 'இண்டியன் எயர் போர்ஸ்'' (INDIAN AIRFORCE) என ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில் எழுதப் பட்டிருந்தது.

அதில் வந்த விமானப் படை வீரர்கள் கம்பீரமான தோற்றத்துடன், மிடுக்காக அமர்ந்து இருந்தனர்.

அவர்கள் நீலமும், மஞ்சளும் கூடிய ஒரு சீருடையில் காணப்பட்டனர். (உ-10)

## பிரபா டில்லியில்; ராஜீவுடனான பேச்சு எந்நேரமும் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நேற்றுக் காலை யாழ் நகரில் இருந்து புறப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று மாலையே புதுடில்லி போய்ச்சேர்ந்தார்.

அவர் எந்த நேரத்திலும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

யாழ்ப்பாணம் சுதுமலை அம்மன் கோவிலடியில் நேற்றுக்காலை வந்திறங்கிய விமானப்படை ஹெலிகளில் இந்தியா புறப்பட்ட பிரபா, முதலில் திருச்சி சென்றார்.

யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற இந்தியத் தூதரக அதிகாரிகள் திரு. எச். எஸ். பூரி, திரு. குப்தா ஆகியோரும் பிரபாவுடன் ஹெலியில் சென்றனர்.

திருச்சியிலிருந்து சென்னைக்கும், பின்னர் சென்னையிலிருந்து விமான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வெங்கட்ராமன் பதவியேற்பு

புதுடில்லி, ஜூலை 25

76வயதான திரு. இராமசாமி வெங்கட்ராமன் இன்று இந்தியாவின் எட்டாவது ஜனாதிபதியாக பதவி ஏற்கின்றார்.

(2 ஆம் பக்கத்தில் கட்டுரை) (உ-எ)

## நாட்டைப் பிரிக்கும் இலக்கிலேயே இந்தியா வழிநடத்துகிறது!

### டோக்கியோவில் பிரதமர்

டோக்கியோ, ஜூலை 24

நாட்டைப் பிரிக்கும் இலக்கை நோக்கியே நாம் இந்தியாவினால் அழைத்துச் செல்லப்படுகின்றோம். இதுதான் இலங்கை மக்களின் அபிப்பிராயம்.

—இப்படி பிரதமர் பிரேமதாஸா கூறினார்.

டோக்கியோவில் வாழும் இலங்கையர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய யோசனைகளை இலங்கை ஏற்றுக் கொண்டால் தீவிரவாதத்தை நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக இந்தியா கூறுகின்றது.

முதலில் தீவிரவாதத்தை அடக்கிவிட்டு பின்னர் பேச்சுக்களுக்கு ஏன் இந்தியா வரக்கூடாது? காலத்துக்குக் காலம் இந்தியா யோசனைகளைக் கொண்டு வந்து எம்மை இழுத்தடித்துச் செல்கின்றது

நிர்ப்பந்தம், வன்செயல்கள் மூலம் சலுகைக்கு மேல் சலுகையாக வழங்கவேண்டிய நிலைமை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இன்னும் நிர்ப்பந்தம் கொடுத்தால் வடக்கு,

( 8ஆம் பக்கம் பார்க்க)

## கிட்டுவும் புதுடில்லியில்

புதுடில்லி ஜூலை 25

திரு. பிரபாகரனுடன் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், முன்னாள் யாழ் மாவட்டத் தளபதி கிட்டு ஆகியோர் புதுடில்லி போய்ச் சேர்ந்தனர். (உ-எ)

## மாத்தையாவிடம் பொறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் யாழ் திரும்பும் வரை அவரின் கடமைகளை திரு. மாத்தையாவே பொறுப்பேற்றுச் செய்வார்.

இத் தகவலை திரு. பிரபாகரனை பத்திரிகையாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

திரு. மாத்தையாவை பத்திரிகையாளர்களுக்கு திரு. பிரபாகரன் அறிமுகஞ் செய்துவைத்தார். (உ-எ)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ் சிறு விளம்பரம்**

**தவறிவிட்டது**

441280939V இலக்கமுடைய எனது அடையாள அட்டையும் டயறியும் 19-07-1987 அன்று நல்லூருக்கும் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பலவாணர் தில்லையம்பலம், அராலி தெற்கு, அராலி என்னும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(1299)

**வாடகைக்கு**

நல்ல சுற்றுடலில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதிக்கு அண்மையில் பாதுகாப்பான இடத்தில் யாழ் நகரபஸ் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் மின்சாரம், நல்ல தண்ணீர், பைப் வசதிகளுடன் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. டிஸ்பென்ஸரி, ரியூட்டரி, தொழிலகங்களாகவும், சந்தோராகவும் பாவிப்பதற்கு ஏற்ற இடம் விபரங்களுக்கு: 53/6, அன்னசத்திரலேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(1355)

**விற்பனைக்கு**

வாழ் நாள் முழுவதும் வழிகாட்டியாக இருக்கும் உன்னதமான நூல் இலகு தமிழில் எண் ஜோதிடம் ''வாழ்க்கைக்கு நலம்தரும் நியூமராலஜி'' தனிப் பிரதி 6/50, தேனிசை மழை ஐந்தாம் பாகம் புதிய பாடல்கள் நிறைந்தது தனிப்பிரதி 4 ரூபா பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். கிருஷ்ணராஜா ஸ்டோர்ஸ் இணுவில். ராஜா வீடியோ அளவெட்டி.
(1357)


# வளைகுடா யுத்தத்துக்குள்

# அமெரிக்காவும் இழுபடும் ஆபத்து

கடந்த ஆறரை ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் ஈரான் – ஈராக் யுத்தத்தில் இவ்வாரம் இரு முக்கிய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒன்று யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கோரும் ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானம்.

மற்றது வளைகுடாப் பிராந்தியத்தில் சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை உறுதி செய்யும் அமெரிக்க அதிபர் றேகனின் நடவடிக்கை.

* ஈரானும் ஈராக்கும் யுத்த நிறுத்தம் செய்து தமது படைகளை அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச எல்லைக்கு வாபஸ் பெற வேண்டும்,

* ஐ.நா. பொதுச் செயலாளர் தலைமையில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

15 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. பாதுகாப்புச்சபை மேற்கண்டவாறு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

இத் தீர்மானத்தை ஈரான் நிராகரித்து விட்டது. இந்த யுத்த மூலம் ஆர்ஜென்டீனாவுக்கு அடுத்ததாக உலகில் பெரிய கடனாளியாகி விட்ட ஈராக் ஆதரித்துள்ளது.

தீர்மானத்தை ஈரான் நிராகரித்ததால் வளைகுடாப்போர் தொடர்ந்து நடைபெறுகிறது.

வளைகுடாவில் சுதந்திரக்கப்பல் போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்கான அதிபர் றேகனின் நடவடிக்கை இதனால் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

### ஆக்கிரமிப்பு நாடு எது?

ஈராக் தான் ஆக்கிரமிப்பு நாடு— அதாவது முதலில் யுத்தத்தை ஆரம்பித்த நாடு ஈராக் தான் என்பது ஐ.நா.

## ஐ. நா. தீர்மானத்தை மீறி மோதல் நீடிக்கிறது

பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தில் இடம் பெறவில்லையாம்.

இதனைக் காரணம் காட்டியே ஈரான் தீர்மானத்தை நிராகரித்தது.

அத்துடன் வளைகுடாவில் தொடர்ந்து கப்பல்களைத் தாக்கப் போவதாகவும் ஈரான் பயமுறுத்தி வருகிறது.

### 1984 முதல்

1984 முதல் வளைகுடாப் போரில் எண்ணெய்க் கப்பல்களும் மற்றும் கப்பல்களும் 1984 ஆம் ஆண்டு முதல் தாக்கப்பட்டுவருகின்றன. ஈராக்கினாலேயே முதலாவது கப்பல் தாக்கப்பட்டது- அதன் பின்னர் 300க்கும் மேற்பட்ட கப்பல்கள் தாக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 70 சதவீதமானவை எண்ணெய்க் கப்பல்கள்.

உலகின் பொருளாதாரத்தில் எண்ணெய் முக்கிய பங்கு வகிப்பதால் உலகின் பொருளாதாரமே ஆட்டம் காணத்தக்க விதத்தில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன. இதனாலேயே அமெரிக்காவும் இதில் பிரவேசிக்க நேர்ந்தது.

வளைகுடாவில் கடைசியாகத் தாக்கப்பட்ட கப்பல் அமெரிக்க யுத்தக் கப்பல் ஆகும்.

ஈராக்கின் ஏவுகணையே



இக்கப்பலைத் தாக்கியது. இத்தாக்குதலில் 37 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.

தவறுதலாக நடந்த சம்பவம் என்று இதற்காக ஈராக் அமெரிக்காவிடம் மன்னிப்புக் கோரியது. அமெரிக்காவும் அதை ஏற்றுக் கொண்டது.

தனது எண்ணெய்க் கப்பல்களுக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவை குவைத் கேட்டிருந்தது.

அப்பொழுது அமெரிக்காவிடமிருந்து உடனடியாக சாதகமான பதில் கிடைக்கவில்லை. அதற்கிடையில் ஈரானுக்கான அமெரிக்க ரகசிய ஆயுத விற்பனை தொடர்பான 'ஈரான்கேட்' விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

இதனால் குவைத் இந்த விவகாரத்தில் மெதுவாக நழுவி சோவியத் யூனியனின் உதவியை நாடியது.

சோவியத் யூனியன் இதற்கு இணக்கம் தெரிவித்த சமயம் பதினொரு குவைத் கப்பல்களுக்கு தனது கடற்படைப்பாதுகாப்பை வழங்க றேகன் நிர்வாகம் இணங்கியது.

றேகனின் இந்த நடவடிக்கை அமெரிக்காவை வளைகுடாப் போருக்குள் இழுத்துவிடும் பேராபத்தைக் கொண்டிருந்த போதிலும் வளைகுடாவில் சோவியத் யூனியன் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்கும் முயற்சியாகவே இது கருதப்படுகிறது.

### சில்க்வேர்ம் ஏவுகணை

வளைகுடாவில் போக்குவரத்துச்செய்யும் கப்பல்களுக்கு இன்று பேராபத்தாக விளங்குபவை சீனத்தயாரிப்பான சில்கவேர்ம் (Sillcwo:m) ஏவுகணைகளே.

இந்த ஏவுகணைகள் தரையில் இருந்து கடலுக்கு ஏவக் கூடியவை.

1,100 இறாத்தல் நாசகாரியைத் தூக்கிக் கொண்டு சுமார் 50 மைல் தூரம் வரை சென்று தாக்கக் கூடியவை.

மத்திய கிழக்கில் அரபு நாடு அல்லாத நாடுகள் இரண்டு மட்டுமே உள்ளன. ஒன்று ஈரான். மற்றது இஸ்ரவேல்.

ஈரானுக்கு இஸ்ரவேல் தற்போது ரகசிய ஆயுத உதவி செய்ததற்கு ஈரான் முன்பு செய்த உதவியே காரணம் என்று கூறப்படுகிறது.

### ஷியா முஸ்லிம்கள்

அரபு நாடு அல்லாத ஈரான் தற்போதைய யுத்தத்தில் வென்று விடக் கூடாது என்பதே

**உலகம்**

மத்தியகிழக்கில் ஏனைய அரபு நாடுகளின் குறிக்கோள் ஆகும்.

ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈரான் வளைகுடா யுத்தத்தில் வெற்றி பெறுவதை சுனி முஸ்லிம்களைக் கொண்ட பெரும்பாலான அரபு நாடுகள் எதிர்ப்பது இயல்பே.

### கடலில் நடக்கும் கெரில்லாப் போர்

1979—81 ஆம் ஆண்டுகளில் 52 அமெரிக்கப் பயணக்கைதிகளை 444 நாட்கள் பிடித்துவைத்தும்—

பேரூட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கடற்படைத் தலைமையகம் ஆகியவற்றைத் தகர்த்து 241 கடற்படையினரைக்கொன்றும்—தரையில் தமது வல்லமையைக் காட்டிய ஈரான் தற்போது கடலில் கெரில்லா யுத்தம் ஒன்றை நடத்தி வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

வளைகுடாவில் திரியும் ஈரானின் அதிவேக சிறிய றோந்துப் படகுகள் எண்ணெய்க் கப்பல்கள்மீது திடீர் என்று நடத்தும் தாக்குதல்கள் குறித்தே இப்படிக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தில் வெற்றி பெறுவதுமூலம் வளைகுடாவில் ஆதிக்கம் செலுத்துவதுடன் ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் ஆட்சியைக் கொண்டுவரலாம் என்று ஈரான் கருதுகிறது.

ஈராக்கில் ஆட்சிப் பீடத்தில் இருப்போர் சுனி முஸ்லிம்கள். ஆனால் நாட்டிலுள்ள பெரும்பான்மையானோர் ஷியா முஸ்லிம்கள்.

இந்த அர்த்தமற்ற யுத்தம் நீடிப்பது உலக சமாதானத்துக்கு பேராபத்து ஆகும். ★

# புதுமனை குடிபுகும் வெங்கட்ராமன்;

# உலகத் தமிழ் மக்களுக்குப் பெருமிதம்

தமிழர் ஒருவர் இன்று புதுடில்லி ஜனாதிபதி மாளிகைக்குக் குடிபோகின்றார்.

அந்த மாளிகையில் தங்கியிருந்து பணிபுரியப்போகும் முதல் தமிழர் இவர் அல்லர்.

அந்த மாளிகையில் இருந்து பணிபுரியப் போகும் முதல் ஜனாதிபதி என்ற பெருமை தான் இவருக்குக் கிடைக்கின்றது.

இதற்கு முன்னர் அந்த மாளிகையின் ஒரு மூலையில் அடக்கமாக வாழ்ந்து பணியாற்றிய பெருமை பெற்ற அந்த முதல் தமிழர் யார்?



அவரைப்பற்றிஅறிந்து கொள்வதற்குமுன்னர் இரண்டு தமிழருக்கு இடமளித்த அந்த மாளிகை பற்றி அறிந்து கொள்வோமா?

அது மாளிகை அல்ல; முந்நூறுக்கு மேற்பட்ட அ[illegible]கள்கொண்ட ஒரு 'வீடு' இப்படித்தான் அதனை நிர்மாணித்த எட்விட் லுற்றெஜன்ஸ் கூறுகின்றார்.

இந்த வீட்டைக் கட்டும்பணி 1921இல் ஆரம்பித்தது. 1929இல் நிறைவேறியது.

அன்று இவ்வீட்டைக் கட்டுவதற்கு ஏற்பட்ட செலவு ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபா (இந்தியப் பணத்தில்)

ஐயாயிரத்துக்கு அதிகமான தொழிலாளர்கள், கட்டடக் கலைஞர்கள், அலங்கார நிபுணர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பலர் எட்டு ஆண்டுகள் பாடுபட்டு நிர்மாணித்த 'வீடு' இது.

ஒன்றல்ல, இரண்டு அல்ல—340 அறைகள் அந்த வீட்டில் உண்டு.

சாதாரண செங்கற்களினால் அமைக்கப்பட்டது அக்கட்டடம்.

330 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள அந்த வீடு மட்டும் 5 ஏக்கர் காணியை உள்ளடக்கியிருக்கின்றது.

அந்த எஸ்டேற் மினி பட்டணமாக உள்ளது. அங்கு பணியாற்றும் ஆயிரம் பேரின் தேவைகளைக் கவனிக்க தேவையான சகல வசதிகளும் உண்டு.

விளையாட்டு மைதானம், வர்த்தக நிலையங்கள், மிருக வைத்திய நிலையம் ஆகியவற்றுடன் சின்னக்காடும் வளர்க்கப்படுகின்றது.

இத்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னமான வைஸ்ராய் தங்குவதற்கு என்று கட்டப்பட்ட இவ் 'வீடு' 'வைஸ்ராய் ஹவுஸ்' என்றே அழைக்கப்பட்டு வந்தது.

இந்தியா சுதந்திரம் பெற்றது. வைஸ்ராய் வெளியேறினார்.

இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் பதவி ஏற்றார்.

அவர்தான் இவ்வீட்டில் 'குடிபுகுந்த' முதல் தமிழர்.

அவர்தான் மூதறிஞர் சக்கரவர்த்தி ராஜாகோபாலாச்சாரியார்.

தமிழர்களினால் அன்புடன் அழைக்கப்படும் ராஜாஜி ஆவர்.

அவரின் காலத்தின் பின்னர் இந்தியா குடியரசானது.

'வைஸ்ராய் ஹவுஸ்' 'ராஷ்டிரபதி பவன்' ஆனது.

[illegible] மேல் அமைக்கப்பட்ட [illegible] அசோகா மண்டபத்தில் ஐந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு உள்ளது.

ஒரு மைல் தூரத்தில் உள்ள 'இந்தியாகேற்' றின் கோபுர உச்சி, புத்தர்சிலையின் பாதத்தைத் தொடக் கூடிய உயரத்தில் உள்ளதாம்.

அப்படி என்றால் அப்புத்தர்சிலை எந்தளவு உயரத்தில் ஜனாதிபதி



வெங்கட்ராமன்

மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை உணரமுடிகின்றது.

இம்மாளிகைக்கு வரும் ஜனாதிபதிகள் எல்லாரும் இப்பிரமாண்டமான வீடு எதற்கு? வெளியே ஓர் அடக்கமான இடம் தந்தால் போதுமே— என்று வாய்விட்டுக்கேட்டுவந்திருக்கின்றனர்.

ஜனாதிபதியாக ஜனதாக்காலத்தில் பதவி வகித்த சஞ்சீவரெட்டி இவ்வேண்டுகோளைவிடுத்தார்.

அவருக்காக அடக்கமான வீடு ஒன்றைத் தேடினர்—சரிவரவில்லை.

முப்படைகளின் சுப்ரீம் கமாண்டரான ஜனாதிபதிக்கு ஏற்றதான வீடு ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமே.

இதனால் எல்லா ஜனாதிபதிகளும் இந்த 'வீட்டில்' வாழப் பழகிக்கொண்டு விட்டனர்.

இந்த மாளிகையில் [illegible] மட்டும் மூவாயிரத்துக்கு [illegible] வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலானவை பிரிட்டிஷ், பிரெஞ்சு ஓவியர்களின் படைப்புக்கள் இந்தியாவின் முன்னாள் வைஸ்ராய், கவர்னர் ஜெனரல்களின் படங்களும் வைக்கப்படடுள்ளன.

1955ஆம் ஆண்டில் சோவியத்தலைவர் நிகிடா குருஷேவ் இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

அப்போது ஜனாதிபதி மாளிகையில் அவருக்கு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

மாளிகையில் உள்ள சிற்பங்கள் படங்களை பிரதமர் நேருஜி, குருஷேவ்வுக்குக் காட்டிக் கொண்டு வந்தார்.

ஒரு கட்டத்தில்.... குருஷேவ்: ஏன் இந்த வைஸ்ராய்களின் படங்களை மாட்டி வைத்திருக்கிறீர்கள்?

இது உங்களுக்கு அடிமைத் தனத்தை நினைவூட்டாதா?

நேருஜி, இப்படங்களை அகற்றுவதன் மூலம் சரித்திரத்தை அழித்து விட முடியாதே!

ஜனாதிபதி மாளிகையில் இடம் பெறும் சம்பிரதாய நடைமுறைகள் அலாதியானவை.

''வெளிநாட்டுத் தூதர் ஒருவர் தனது நியமனப் பத்திரங்களைக் கையளிக்கச் செல்கிறார்.

மாளிகையின் நுழைவாயிலில் வைத்து ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர்கள்குதிரைகளில் அணிவகுத்து நின்று வரவேற்பர்.

பின்னர் ஊர்வலமாக அசோகா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்

**தீபன்ராஜா --**

படுவர். அங்கு தூதர் தனது நியமனப் பத்திரங்களை ஜனாதிபதியிடம் கையளிப்பர்.

அதன் பின்னரே அத்தூதர் தனது காரில் தனது நாட்டின் தேசியக் கொடியைப் பறக்க விட முடியும்''!—

இச் சம்பிரதாயங்களுக்கு ''மேலாக மௌனமாக வாழும் வாடகைக் குடியிருப்பாளர் அல்லர்''— என்ற உரிமைக் குரலும் அண்மைக் காலமாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் அந்த மாளிகைக்குக் குடி போகும் முதலாவது ஜனாதிபதியான தமிழருக்கு இரண்டு பணிகள் காத்திருக்கின்றன.

ஒன்று, பிரதமர் ஜனாதிபதி உறவை அரசமைப்புப் பிரச்சினை பற்றிய 'பிச்சுப் பிடுங்கல்' இல்லாமல் ஆரோக்கியமாக அமைத்துக் கொள்வது.

இரண்டாவது, மாளிகையில்சுவையானகாப்பி வழங்க நடவடிக்கை எடுப்பது.

மாளிகையில் முன்னர் வழங்கப்பட்டகாப்பியின் நறுமணம், சுவையுடன் காப்பி வழங்க நடவடிக்கை எடுப்பது.

இந்தியா சுதந்திரம் அடைந்த முதலாவது வருடத்தில் ஒரு தமிழர் அந்த மாளிகையில் குடியேறினர் — கவர்னர் ஜெனரலாக.

40 ஆண்டுகள் கழுத்து இன்று இரண்டாவது தமிழர் குடியேறுகிறார்– ஜனாதிபதியாக. ★


# பிரயாண ஒழுங்குகள்

## ★ HORIZON ENTERPRISES ★

நாம் பிரதி வாரந்தோறும் பிரயாணம் செய்வோரின் பெயர் விபரங்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றோம்.

1987 தை மாதம் முதல் சென்ற மாதக் கடைசிவரையில் எம்மால் பிரயாணம் மேற்கொண்டோர் பெயர் விபரங்கள் நாளை 26-7-1987 ஞாயிற்றுக்கிழமை உதயனில் வெளிவரும்.

★ குவைத் ★ மாலைதீவு
★ பாஹ்ரெயின் ★ சவூதி அரேபியா

முதலான மத்திய கிழக்கு நாடுகளுக்கான அனைத்து வேலை வாய்ப்புகளிற்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

அவ்வப்பகுதி மக்களின் வசதிகளை முன்னிட்டு 2 கிளைக் காரியாலயங்கள் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விலாசம்:

R. குணரத்தினராசா
கண்டி வீதி, கொடிகாமம்.
(கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக)

இலியாஸ் ஏபிரகாம் A. P.
இரண்டாம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

தலைமைக் காரியாலயம்:

**A. பத்மதாஸ்**
**97/1, பருத்தித்துறை வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

கடிதமூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் சுய விலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும்.

நேரில் தொடர்பு கொள்வோர் காலை 8 மணி முதல்–மாலை 6 மணி வரையுள்ள காரியாலய நேரத்தில் சந்திக்கவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது தமிழ் மண்ணிலோ பாரிய உயிரிழப்பு; போராளிகள் செய்யும் தியாகமோ நிகரற்றது; இத்தனைக்கும் ஈடு செய்யும் தீர்வே அவசியம்

போராளிகளின் போராட்டத்தில் மக்கள் இணையவேண்டும் அதனால் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்.

போராளி இயக்கங்களுக்கு இராணுவ ரீதியான போராட்டத்தை முன்னின்று நடத்தும் சக்தி நிறைய உண்டு.

இந்த இராணுவவழிப் போராட்டம் மூலம் அரசியல் வெற்றியை உறுதி செய்வதே அவர்களின் இலட்சியம்.

இராணுவ வழிப் போராட்டத்தைப் போன்று இராஜதந்திர ரீதியிலும் போராளிகள் தமது திறனை, வலுவை அரசுக்கு உணர்த்த வேண்டியமை ஒரு வரலாற்றுத் தேவை. இராணுவ ரீதியில் அரசினை முகங்கொடுப்பது போல ராஜதந்திர ரீதியிலும் அவர்கள் அரசுக்கு முகங்கொடுக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாட்டை முன்வைத்துக்கொண்டு தீவிரவாத இயக்கங்களை இந்தியாவில் இருந்து அந்நியப்படுத்துவது இலங்கை அரசின் தந்திரம். Intr-ansigence என்பார்கள்.

பேச்சுவார்த்தைக்குப் போராளிகள் வருகிறார்கள் இல்லை என்று சர்வதேச தொடர்புச்சாதன ரீதியாகச் சொல்லிக்கொண்டு தமிழர் தேசியவாதத்தைத் தமிழர்தம் உரிமைபோராட்டத்தை பயங்கரவாதம் என்று கறுப்பு மைபூசிக் களங்கப்படுத்த இலங்கை அரசு முனைகிறது.

கோரிக்கை ஒன்றாக இருக்க பிறிதொன்றுக்குப் பேச்சுவார்த்தைக்கு அரசு அழைப்பு விடும்.

அரசாங்கம் தமிழர்தம் அபிலாஷைக்கு மிகக் குறைவான தீர்வை - below the bottom line முன்வைத்து விட்டு,-

அதனாலே போராளிகளைப் பேச்சுவார்த்தையை நிராகரிக்கச் செய்து விட்டு -

பின்னர் போராளிகள் பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள் இல்லை என்று

**இராணுவத் தாக்குதல்போல் இராஜதந்திரத்தாக்குதல் இன்றைய வரலாற்றுத் தேவை**

சர்வதேச அரங்கில் ஒரு பிரசாரத்தை அரசு செய்ய முனைகிறது.

வடமராட்சியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசு போராளிகளைப் பேச்சுவார்த்தைக்கு இணங்கச் செய்வதற்கான தாக்குதல் என்று விளக்கம் கொடுத்தது.

இது சமாதானத்துக்கான போர் என்ற வாதமே அல்லாமல் வேறு இல்லை. இப்படியான முரண்நிலை அரசிடம் காணப்படுகிறது.

இத்தகைய சூழலிலே போராளிகள் தமது Military offensive போல diplomatic off-ensive அதாவது இராஜதந்திர தாக்குதலிலும் ஈடுகொடுக்கவேண்டியது இன்று ஒரு காலத்தின் தேவை.

—இப்படிக் கலாநிதி சிவத்தம்பி பேசினார்.

### கலாநிதி பாலசுந்தரம்

வடக்கு,கிழக்கு மாகாணங்களை அம்பாறைத் தேர்தல்மாவட்டம் நீங்கலாக ஒருவகை ஸ்தாபன ரீதியான தொடர்பு மூலம் இணைப்பது என்பதும் டிசம்பர் 19யோசனைகளில் ஒன்றாகும்.

வடமாகாணத்தைப் பொறுத்த அளவில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இருப்பதாகத்தெரியவில்லை.1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி வடமாகாணத்தில் சுமார் பத்துலட்சம் மக்கள் (1·1 மில்லியன்) வாழ்கிறார்கள்.

இங்கு வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

1983 - 84 ஆம் ஆண்டுகளில் மக்கள் இடம் பெயர்ந்து இருப்பதால் எந்தத் தீர்வின் போதும் மக்களின் மீளக்குடியேறும் உரிமை (Right to Re - Settlement) வலியுறுத்தப்படுவது அவசியம்.

### கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த அளவில் இனப்பரம்பல் வித்தியாசமானது. மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணம் 9863 சதுரகிலோ மீட்டர் பரப்புடையது. ஒன்பதுலட்சத்து தொண்ணூற்றி மூவாயிரத்து முந்நூற்றொருவர் இதன் சனத்தொகை.

தமிழர்கள் 72 வீதம், முஸ்லிம்கள் 24 வீதம், சிங்களவர் 3·21 வீதம் என்பதே மட்டக்களப்பு இனப்பரம்பலாகும்.

சிங்களவர்35·8 வீதம், தமிழர் 32 வீதம் முஸ்லிம்கள் 28·5 வீதம் என்பதே திருகோணமலை இனப்பரம்பல்...

சிங்களவர் 37·64 வீதம், தமிழர்கள் 20·50 வீதம், முஸ்லிம்கள் 41·53 வீதம் என்பதே அம்பாறை மாவட்ட இனப்பரம்பல்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறைத் தேர்தல் மாவட்டத்தை நீக்கும்போது தமிழர் வீதாசாரம் 46 ஆகவும் முஸ்லிம்கள் 36·4 ஆகவும் அதிகரிக்கும்.

வடக்கு, புதிய கிழக்கு இணைப்பால் இனப்பரம்பல் தமிழர் 69வீதம், முஸ்லிம்கள் 18·5 வீதம், சிங்களவர் 80 வீதம், இந்தியத் தமிழர் 4வீதம் என்று அமையும்.

### கலாநிதி நித்தியானந்தன்

மூன்றாம் உலக நாடுகளில் ஆளணி, கனிவளம், கடல்வளம், நீர்வளம், நிலவளம் போன்ற

**வடகிழக்கு எமது தாயகம் தமிழ்மக்கள் தேசிய இனம் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை உள்ளடக்கியதீர்வுவேண்டும்**

பல்வேறு மூலவளங்கள் இருப்பினும் அவையிடத்து போதிய அதிகார பலம் இருக்காமையால் பிரதேச அபிவிருத்தி இடம்பெறவில்லை. இது வரலாறு தரும் பாடமாகும்.

இலங்கை என்ற தேசிய எல்லைக்குள் ஒரு தீர்வு ஏற்படும்போது அது சமஷ்டி அமைப்பாக இருப்பினும் கூட உத்தேச சபைகள் பிரதேச அபிவிருத்திக்குப் பெரும் பங்களிப்பது அவ்வளவு சாத்தியம் இல்லை.

ஆகக்கூடிய சமஷ்டி ஆட்சியாய் இருப்பினும் கூட தேசிய அபிவிருத்திக் கொள்கை நிர்ணயம், வெளிநாட்டு உதவி ஆகியவை மத்திய அரசிடமே இருப்பதுண்டு.

உத்தேச அமைப்பில், இவ்வதிகாரங்கள் மத்திய அரசின் கரத்தில் இருப்பின், ஏனைய சபை

**காத்திரமான தீர்வானால் போராட்ட காலத்திலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்**

களுக்கு நமது சபைகளுடன் புரிந்துணர்வு இல்லாதவிடத்து, இன்றைய இனப்பிரச்சினையின் பின்னணியில் எமது பிரதேசஅபிவிருத்தியினை நாம் முன்னெடுத்துச் செல்வது கஷ்டமாகலாம்.

### கலாநிதி சிற்றம்பலம்

டிசம்பர் 19 யோசனைகள் என்ற காலகட்டம் வரை இதுவரை தமிழ்த் தலைவர்களுக்கும் அரசுக்கும் இடையே இரண்டு ஒப்பந்தங்கள் மட்டுமே கைச்சாத்தாகி உள்ளன. ஏனையவை பல காலத்துக்குக் காலம் யோசனைகளாகவே இருந்துள்ளன.

இவ்விரண்டு ஒப்பந்தங்களும் 1957 இல் கைச்சாத்தான பண்டா செல்வா உடன்படிக்கை, 1959இல் உருவான டட்லி - செல்வா ஒப்பந்தம், இரண்டும் ஆட்சியாளர்களால் கௌரவிக்கப்படவில்லை.

பின்னர் காலத்துக்குக் காலம் ஆட்சியாளருக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கங்களுக்கும் இதேகதிதான் ஏற்பட்டது.

1926இல் கண்டியயச் சிங்களவர்கள் மலைநாடு, கரையோரம், வடக்குக் கிழக்கு என்று மூன்று தன்னாட்சிப்பிரதேசங்களைக் கோரினார்கள்.

சேர்.பொன். அருணாசலம், ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோர் நாடாளுமன்ற அமைப்புக்குள் பிரதிநிதித்துவம் மூலம் தமிழர் பிரச்சினைக் குத்தீர்வுநாடித் தோல்வி கண்டார்கள்.

ஆனால் 1949இல்தந்தை செல்வா ஒரு திசைதிருப்பத்தை ஏற்படுத்தினார்.

'இலங்கை கைப்பற்றப்பட்டபோது தமிழர்கள் சுதந்திரமாக இருந்தமையாலும்,

அவர்களது மொழியும் கலாசாரமும் தொன்

> யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற டிசம்பர் 19 ஆம் திகதி யோசனைகள் பற்றிய கருத்தரங்கின் தொகுப்பு இது.

மையானது என்பதாலும்,

நாட்டின் மூன்றிலொரு பங்கு நிலப்பரப்பில் வடக்குக் கிழக்கு அவர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசமாக இருப்பதாலும்,

தமிழ் மக்கள் ஒரு தனித் தேசிய இனமாக இருத்தலாலும்,

தமிழ் மக்களுக்கு அடிப்படையான மறுக்க முடியாத சுயநிர்ணய உரிமை இருப்பதாலும்,

அவர்களுக்கு சமஷ்டி ஆட்சியில் தன்னாட்சி தேவை என்று திருகோணமலையில் தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பண உரையை நிகழ்த்திய போது தந்தை செல்வா வலியுறுத்தியிருந்தார்.

அதன்பின்னர் இற்றை வரைக்கும் குருதிசிந்தி இளைஞர்கள் போராடிய காரணத்தால் எமது போராட்டம் கூர்மை அடைந்துள்ளது.

மேற்கூறிய 4 அடிப்படை அம்சங்களையும் விட்டுக்கொடுக்காத தீர்வே ஏற்புடையது.

### கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

1883தொடக்கம்1893 வரை உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்த இனப்பிரச்சினை 83 ஜூலை வன்செயலுடன் இந்திய தலையீட்டுக்கு வழிசமைத்தது. அப்போது மாத இறுதிக்குள் கலவரத்தை அடக்கிவிட்டால் இந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வேதனை தான் மிஞ்சிடுது!

அறம் வெல்லும் என்று நீ
அன்று பாடினை ஆயினுமுன்
திறம் சொன்ன சேதி யெலாம்
திக் கெட்டும் பரவிடினும்
முறம் கொண்டு பகையொழித்த
முன்னோர் வீர திரங்கள்
நிறம் மாறாப் பூக்களாய்
நித்தம் மணம் வீசிடினும் - விடுதலை
வரம் கேட்டு அதற்கெனவே
வரித்திட்டார் வாடுகையில்
சிரம் கொய்யும் சறுப்புச்
சேனை வந்திறங்கிய பின்
அறம் வெல்லும் நம்பிக்கை
அற்றருகும் வேளைதனில் - உன்கவித்
திறம்பாடி அவ்வழகில்
திளைக்காது செருக்கரை
மறம்பாடி மாய்க்கவென்றே
மனந்துணிந்து எழுத்தாணி
கரங்கொண்டு எழுதிநிதம்
களமதிலே புகுந்தாலும்
உளந்தளரா உள்ளமதில்
ஊறுவதோ வேதனைதான்!

### ★ அகதிகள் அவலம் ★

போரணிகள் ஒரு புறமும்
போகவர இடமின்றி
ஆரணிய காண்டமதாய்
அகதிகள் முகாம்களிலே
அந்தரித்து ஏங்கி நிற்கும்
அவலம் ஒரு புறமும்
இந்தியப் பிச்சைக்காய்
இரந்து பரிதவித்து
முந்தி விழுந்தடித்து
மோதுவோர் மறுபுறமும்
இந்த இழி நிலைமையிலே
செந்தமிழர் காவியத்தின
சுந்தர காண்டமதைச்
சுவைக்க முடியாத
அந்தரத்தில் மிஞ்சுவது
ஆறாத வேதனைதான்!

மதிலைப் படலைகளை
மற்றும் வீடு வளவுகளை
சிதிலப்படுத்துகின்ற
சிரழிவு நிகழ்வேளை
மிதிலை நகர் வாயில்
மேல் மாடி மேல் நின்று
அண்ணலை நோக்கியதும்
அவனவளை நோக்கியதும்
விண்ணில் தம் இறக்கை
விரித்தோடிப் பறந்ததுவும்
கண்ணாலே கண்டதுபோல்
கம்பனவன் காட்டி வைத்த
நுண்ணிய கவித்திறத்தை
நுகர்ந்து சுவைப்போமா?
புண்ணுக்கு மருந்தின்றி
போட்டவுடை மாற்றின்றி
கண்ணீர் வடிந்தோடும்
கவலை மிகு காலமதில்
தண்ணீருமின்றித்
தவிக்கின்ற வேளைதனில்
எண்ணத்தில் மிஞ்சுவது
எமக்கென்றும் வேதனைதான்!

### ★ சீதனக் கொடுமை ★

சீதையைச் சிறை மீட்ட
சித்திரத்தை யுத்தமறைக்
காதையாய் காவியமாய்
கண்ணியமாய் கற்றிடுவோர்
சீதனத்தின் கொடுமையதால்
சிறை கிடக்கும் சீதைகளை
ஆதனமும் பாதனமும்
ஆஸ்தியும் கொடுத்திங்கே
விடுதலை செய்யவல்ல
வீறிருந்தும் வழியிருந்தும்
வரும்படிக்காய் ஓடுகின்ற
வாலிபரை எண்ண நெஞ்சில்
எஞ்சுவது வேதனைதான்!

### ★ கைதிகள் அவலம் ★

காலியில் பூஸாவில்
கைதான இளைஞர்தம்
சோலிகள் பெருகிவரும்
சோகமான சூழலிலே
தாலிகள் அறுந்துபோன
தலைவிதி நொந்து வாடும்
ஆவிகள் எமது பண்ணில்
அல்லல்படும் போது
வேலி விராய்க்கு
வேண்டாத வழக்காடும்
போலிகளைக் கண்டால்
பொங்குவதோ வேதனைதான்!

இறப்போரை, இன்தமிழ்சாக்க
இரவு பகல் ஆலாய்
பறப்போரைக் கண்டுமனம்
பரிதவிக்கும் நேரமதில்
கம்பரசம் பருகிநாம்
களித்துக் கூத்தாட
பொம்மர்கள் தடை
போட்டாலும் கூட
கம்பன்தன் கழல் பற்றி
கவியாரம் சூட்டும்
எம்மனதில் இன்று
எஞ்சுவது வேதனைதான்!

— க. பொ. நடனசிகாமணி

(அகில இலங்கைக் கம்பன் கழகம் ஒழுங்கு செய்த கவியரங்கில் பாடப்பெற்றது.)

# ஈழத்துப் பெண் எழுத்தாளர்களிடம் மிக ஆழமான சமூகப்பார்வை உண்டு

## - புதுமைப்பிரியை கருத்து

முற்போக்கு எழுத்தாளர் வரிசையிலே கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக 'புதுமைப்பிரியை' என்ற புனைபெயரில் புரட்சிகள் பல செய்து வரும் திருமதி பத்மா சோமகாந்தன் வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல. ஓர் பாடசாலை அதிபர். நல்லதொரு குடும்பத்தின் பொறுப்பு வாய்ந்த தலைவி. எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் நிறைந்த ஒரு தாய். வைதீகக் குடும்பத்தில் தோன்றி அதன் கட்டுப்பாட்டில் வளர்ந்து, திடீரென அதனின்றும் விடுபட்டு இனம், மொழி, சமூக சேவை உணர்வுகளில் புதுமை காணும் பிரியையாகி எழுத்துலகில் பிரவேசித்தவர்.

இளம் வயதில் தமது பிராமண சமூகப் பெண்கள் அடக்கி, ஒடுக்கப்பட்டு சுதந்திரமற்று வாழ்ந்த நிலை கண்டு பொறுக்க மாட்டாமல் அவர்களின் விடுதலைக்காக வீறு கொண்டெழுந்து, எழுதத் தொடங்கியதாக எமக்களித்த பேட்டியில் புரட்சியுடன் கூறுகிறார்.

கேள்வி:-நீங்கள்எழுத்துத் துறையில் எந்தத் துறை எழுத்தாளராக விளங்குகிறீர்கள்?

பத்மா:- சிறுகதைத் துறையில் ஈடுபட்டு அதில் தொடர்ந்து பயிற்சி பெற்று சிறந்த சிறுகதைகள் எழுதுபவர்கள் சிறுகதை எழுத்தாளர்களாகப் புகழப்படுகிறார்கள். அவ்வாறே நாவல் எழுத்தாளர்களும். கலையும் இலக்கியமும் வெறும் சுவைப் பொருட்கள் அல்ல. அவை மக்களுடைய சிந்தனையைத் தூண்டிவிட்டு, மக்களின் மேம்பாட்டிற்கான - முன்னேற்றத்திற்கான செயலுக்கு இட்டுச்செல்ல வேண்டும். நம் நாட்டில்

**புதிய பெண் எழுத்தாளர் பரம்பரை இன்று வேகமாக வளர்கிறது**

இப்போது எழுதுகின்ற நூறுவீதமான எழுத்தாளர்களுக்கும் இந்த நோக்கம் இருக்கின்றது. ஒருகால் நூற்றாண்டுக்கு முன் இந்நோக்கத்துக்கு மாறான ஒரு கருத்து; அதாவது இலக்கியம் இலக்கியத்துக்காகத்தான். அது வெறும் பொழுது போக்கு ரசனைக்கு மட்டுமே என்ற கருத்துக் கொண்டவர்களும் இருந்துள்ளார்கள். அப்படி எழுதாமல் சமூக முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு சமூகப் பிரக்ஞையுடன் எழுதவேண்டுமென்ற கருத்தைக் கொண்டவர்களே முற்போக்கு எழுத்தாளர்கள்.

இலக்கியம் சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும், சமூகத்தை முன்னேற்றுவதற்கான கருத்துக்களை எடுத்தியம்பிட வேண்டும் எனக் கருதுபவள் யான்.

கேள்வி:- எழுதவேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு ஏற்படக் காரணம் என்ன? எதனை அடிப்படையாகக் கொண்டு அல்லது யாரைப் பின்பற்றி எழுதுகிறீர்கள்?

பத்மா:- எனது படைப்புக்கள் அச்சாகி, பல்லாயிரம் மக்கள் படிக்கக் கூடியதாகப் பத்திரிகையில் வெளிவருவது பெரும் மகிழ்ச்சியையும்



பத்மா சோமகாந்தன்

ஆர்வத்தையும் எனக்கு ஆரம்பத்தில் ஊட்டியது. அதனால் நான் எனது மாணவப் பருவத்திலேயே எழுதத் தொடங்கினேன்.

என் இளம் மனதிலே பெண்கள், அதுவும்எமது பிராமணப் பெண்கள் அடக்கியொடுக்கப்பட்டு சுதந்திரம் நசுக்கப்பட்டு வாழ்வதைஉணர்ந்துவிடுதலைக்காக வீறுகொண்டு எழவேண்டும் என்ற துடிப்பு, பெண்களும் உரிமையுடையவர்களாக வாழவேண்டுமென்ற எண்ணம் எனது எழுத்து ஈடுபாட்டுக்கு தூண்டுதலாக அமைந்தன. எனது எண்ணங்களைக் கட்டுரைகள், சிறுகதைகளாக மட்டுமல்ல, கவிதைகளாகவும் வெளியிடுவதற்கு ஈழகேசரி, சுதந்திரன் போன்ற தினசரிகள் களம் அமைத்துத் தந்தன.

எனது எழுத்தாற்றலையும் தமிழ்ப் பற்றையும் சிந்தனையையும் தூண்டிவிடுபவையாக டாக்டர் மு. வரதராசன், கல்கி, அண்ணா, அகிலன் போன்றோர் [illegible]

கேள்வி:- இதுவரை எவ்வளவு படைப்புக்களை செய்துள்ளீர்கள். இதில் பிரசுரமான அல்லது நூலுருப்பெற்றவை எவை? அவற்றுள் தங்களுக்குப் பிடித்தமானது எது எனக் கூறலாமா?

பத்மா:. பெண் விடுதலை, சீதனக் கொடுமை, மூடக்கொள்கை எதிர்ப்பு, தமிழினத்தின் மாண்பு போன்றவை சம்பந்தமாக நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள், ஐம்பதுக்கு அதிகமான சிறுகதைகள், சில கவிதைகள் எழுதியுள்ளேன். எல்லாமே பிரசுரமானவைதான். எனினும்

**செவ்வி: வி. பி. சர்மா**

தொகுதியாக இன்னும் நூலுருப் பெறவில்லை. ''கடவுளின் பூக்கள்'' என்ற எனது சிறுகதைத் தொகுப்பு விரைவில் தொகுதியாக வெளிவரவுள்ளது. மாணவர்களுக்கான எனது பயிற்சி நூல்கள் பல நூலுருவில் வெளிவந்துள்ளன. கல்வி அமைச்சின் பாடநூற் குழுவில் நான் அங்கத்தவராக உள்ளேன். எனது ஆரம்பகால சிறுகதை [illegible] அனைத்தும் சிறந்தவை [illegible] நினைக்கிறேன். எனது எழுத்து முதிர்ச்சியும் அனுபவமும் தான் அதற்குக் காரணம் எனலாம்.

### பெண்ணிலைவாதம்

கேள்வி:- 'பெண்ணிலைவாதம்'' என அண்மைக் காலங்களில் பேசப்படுகின்றதே. அதைப்பற்றிய தங்கள் கருத்து...? அது நமது நாட்டுக்கு எவ்வளவுக்குப் பொருத்தமுடையது?

பத்மா:- உலகில் எல்லா நாடுகளிலும் பெண்ணினம் பரம்பரை பரம்பரையாக இரண்டாம் பட்சமாகக் கருதப்பட்டு வருகிறது' தொழில்வாய்ப்பு, கல்வி, ஊதியம், குடும்பபராமரிப்பு முதலிய பல துறைகளில் பலவழிகளாலும் பெண்ணினம் சுரண்டப்பட்டு வருகின்றது.

பெண்களை வியாபாரப் பொருள்களாக்கி நடத்தும் நிலையும் பல நாடுகளில் இன்னமும் காணப்படுகிறது. இவற்றை வேரோடு களைந்து எறிந்து பெண்ணும் ஆணைப்போல சகல உரிமைகளும் படைத்த மனித உயிர் என்பதை நிலைநாட்ட

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்திருந்த திருடன் பிடிபட்டான்

ஒருநாள் முன்னிரவு நேரத்தில் தெனாலி ராமன் வெளியே சென்றுவிட்டு வீட்டுக்கு வந்தான்.

அவன் மனைவி சாப்பாடு தயாராக இருக்கிறது என்று கூறவே கை கால்களைச் சுத்தம் செய்வதற்காக புறக்கடைப் பக்கம் சென்றான்.

புறக்கடையில் ஒரு பானையில் வைக்கப்பட்டிருந்த நீரை ஒரு குவளையில் எடுத்து முகம் கழுவிய போது அருகிலிருந்த பூஞ்செடிக்குப் பின்னால் ஒரு திருடன் மறைந்து அமர்ந்திருப்பது அவன் கண்களில் பட்டுவிட்டது.

தன் ஒருவனால் மட்டும் திருடனைப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட தெனாலி ராமன் ஒரு தந்திரத்தைச் செய்தான்.

பானையில் இருக்கும் நீரை முகர்ந்து முகர்ந்து வாயைக் கொப்பளித்து திருடன் மீது உமிழத் தொடங்கினான்.

ஒரு பானை தண்ணீரும் காலியாகி விட்டது.

மனைவியை அழைத்து மற்றொரு பானைத் தண்ணீர் கொண்டு வரச் சொன்னான்.

கணவனின் செயல் அவன் மனைவிக்கு விநோதமாகப்பட்டது.

இவர் ஏன் இப்படி வீணாக வாயைக் கொப்பளித்துத் தண்ணீரை விணடிக்கிறார் என்று எண்ணிக் கொண்டு 'ஏன் தண்ணீரை வீணாக்குகிறீர்கள்' என்று கடிந்து கொண்டாள்.

உடனே தெனாலி ராமன் வாயைக் கொப்பளித்து நீரைத் தன் மனைவியின் மீதே உமிழத் தொடங்கி விட்டான்.

தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று சந்தேகப்பட்ட மனைவி 'குய்யோ முறையோ' எனக் கத்தி ஊரைக் கூட்டி விட்டாள்.

அக்கம் பக்கத்தில் இருந்த மக்கள் வந்து கூடி விட்டனர்.


தெனாலிராமனின் மனைவி வந்து கூடியவர்களை நோக்கி 'என் கணவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது போலிருக்கிறது. தண்ணீரைப் பானை பானையாக வாய் கொப்பளித்து வீணாக்குகிறார். ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டால் என்மீதே வாயைக் கொப்பளித்து உமிழ்கிறார்' என முறையிட்டாள்.

கூட்டத்திலிருந்த ஒருவர் 'என்ன தெனாலி ராமா, ஏன் இப்படிச் செய்கிறாய்?' என்று கேட்டார்.

'என் மனைவிக்குக் கொஞ்சங் கூடப் பொறுமை இல்லை. இதோ இந்தச் செடிக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் பெரிய மனிதர் மீது எத்தனையோ தடவை வாய் கொப்பளித்து உமிழ்ந்தும் இவர் ஒன்றும் சொல்லவில்லை. என் மனைவியோ ஒரு தடவை வாயைக் கொப்பளித்து அவள் மீது உமிழ்ந்ததற்காக சத்தம்போட்டு ஊரைக் கூட்டி விட்டாள்' என்று தெனாலி ராமன் சிரித்துக் கொண்டே கூறினான்.

வந்திருந்தவர்கள் திருடனைப் பிடித்துச் சென்று மன்னரிடம் ஒப்படைத்து விட்டனர்.

## முயன்று பாருங்கள்



மேலேயுள்ள 25 சதுரங்களில் எப்படிக் கூட்டினாலும்—அதாவது மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் — கூட்டெண் 30 வரத்தக்கதாக இலக்கங்களை இடவேண்டும். இது முடியுமா உங்களால், முயன்று பாருங்கள்.

விடை அடுத்தவாரம்

### சென்ற வார சஞ்சிவியில் வெளியான(18.7.87) முயன்றுபாருங்கள் பகுதிக்கான விடைகள்

| இடமிருந்துவலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. இரகசியம் | 1. இருதயம் |
| 5. கரு | 2. ரகம் |
| 6. சுப | 3. சிசு |
| 7. தம்பி | 4. பயணம் |
| 9. உணவு | 8. பிறவி |
| 10. பறம்பு | 9. உப்பு |
| 12. விதி | 11. பதி |




### மூன்று நண்பர்கள்

உணவு, அமைதி, முக மலர்ச்சி ஆகிய மூவருமே உலகில் தலை சிறந்த மருத்துவர்கள்.

முன்னிரவில் தூங்கி அதிகாலையில் எழுந்திருப்பவனுக்கு உடல் நலமும், செல்வமும், அறிவும் பெருகும்.

வைத்தியர்களைவிட உணவு முறை அதிக குணத்தை உண்டாக்கும். நீண்டநாள் வாழ்வதற்கு சுதகுதப்பான உடையணியவும், மிதமாக உண்ணவும், நிறைய நீர் பருகவும், மதிய உணவுக்குப்பின் சிறிது நேரம் அமர்ந்திரு, இரவு உணவுக்குப் பின் ஒரு மைல் நட.

## சஞ்சீவி சிறுகதை

# அகதி அரிசி

காங்கேசன் துறை, தையிட்டி, மாவிட்டபுரம், வீமன்காமம், கட்டுவன் ஆகிய இடங்களை உள்ளடக்கிப் போடப்பட்ட யாழ்ப்பாண வானொலியின் பிரசித்த இராணுவ அறிவிப்பான ஊரடங்குச் சட்ட அறிவித்தலோடு, வடமராட்சியில் நடந்து முடிந்த அகோரங்களின் கெடிக் கலக்கத்தோடு...

ஊரோடு ஊராக, இந்த ஒரேஒரு 'திருப்பி எடுக்கமுடியாத' அருமந்த உயிரை மட்டும் காப்பாற்றிக்கொண்டால் போதும் என்ற எண்ணத்தோடு, குழந்தை குட்டிகளையும் அள்ளிக்கட்டிக்கொண்டு சுன்னாகத்துக்கும் அப்பால் ஓடிப்பறந்த அருமை.

ஒரு கிழமை கழித்து ஊரைச் சுற்றிவளைத்துப் பிடித்துவைத்திருக்கும் படையினருக்குப் பயந்து செத்துக்கொண்டே... சிவகாருணியம் மாஸ்ரர் வீட்டில் ஒரு பெரிய உரப்பையைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு வந்த அகதிஅரிசியை எடுத்துப்போவதற்காக,

ஊருக்குள் கால்கள் இடறுப்படக் காலடி வைத்து, சிவகாருணியம் மாஸ்ரரின் வசந்த மாளிகை வாசலில் வந்து நின்றபோது...

''ஆரடாப்பா... அருமையே... படையினர் வெட்டிப்போடுவானென்று அகதியாய் ஓடிப்போய்... பேந்தேன் துணிஞ்சு வந்தனீ...??'' என்று ஒருவித திடுக்காட்டத்தோடு, ஆரம்பித்த சிவகாருணியம் மாஸ்ரர்,

'ஒரு பெரிய விபரீதமல்லோ...? நடந்துபோய்ச்சுதடா அருமை' என்று அருமையாகச் சொல்லிமுடித்ததும்... தனது அகதி அரிசிக்குத்தான்... விபரீதம் நடந்திருக்கவேண்டுமென்று... அந்நேரத்து மனப்பசியிலும், வயிற்றுப் பசியிலும், ஒரு கணம் தனக்குள் இடிந்துபோன கோலத்தோடு காட்சியளித்த அருமையை,

சிவகாருண்ணியம் மாஸ்ரர், முகத்தில் எந்தவிதமான பரிதாப உணர்ச்சி மருந்திற்கும் இல்லாதவராக, கவலையோடு அவனைப் பார்ப்பதாக நினைத்துக் கொண்டு, ஒருவித தூங்கு மூஞ்சியோடு பார்க்கின்றார்.

''தம்பி...அருமை... இப்பிடியான ஒரு பொல்லாப்பு நடக்குமெண்டு... எனக்கு வேளைக்கே... தெரிஞ்சிருக்குமெண்டால்... நான் உன்ரை அகதி அரிசியை இங்கை வைக்கவோ விட்டிருக்கமாட்டன்'' என்று சிவகாருணியம் மாஸ்டர் நடந்த விபரீதத்தை உறுதிப்படுத்தியதும்... பன்னிரண்டு அங்கத்தவரடங்கிய தனது குடும்பத்தின் வயிற்றிலும் தலையிலும், ஷெல்கள் வந்து விழுந்துவிட்டதைப்போல்,

அருமை கருகிச்செத்த பிணமாகிப்போயிருக்க சிவகாருணியம் மாஸ்ரர் கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு, வீட்டிற்குள் வந்துநுழைந்த இராணுவம் தமது வீட்டிலுள்ள பெறுமதியான பொருள்களோடு வைக்கத்தந்த இந்த அகதி அரிசியையும் அள்ளிக்கொண்டு போன கதையையும் மிக அருமையாக செத்த பிணத்துக்குச் சொல்வதுபோல் சொல்லிக்கொண்டிருந்தார்.

அருமையின் சிந்தனைகள்... சிவகாருணியம் மாஸ்ரரின் அலட்டலை அதற்குமேலும் கேட்காமல், பலபாட்டிற்கும் அந்த அகதி அரிசியைச் சுற்றித் தாவிப்பறக்கத் தொடங்கி விடுகின்றன.

''...இந்த நாளையிலை ஆரைத்தான்...நம்பமுடியுது. ஆமியைச் சாட்டி நாங்கள் விளையாடினால்? ஆரை ஆர் கேக்கிறது? சே...இப்பிடியும் நினைக்க முடியாமலும் கிடக்கு. எனக்குப் படிப்பிக்கிற காலத்திலை... பொய்... களவு கூடாதெண்டு படிப்பிச்ச ஒரு வாத்தியார் ஐஞ்சு ஆம்பிளை மக்களும் வெளிநாட்டிலை. அவர் இந்த அரிசியாலை தான் கோட்டைகட்டி'' என்றெல்லாம் தனது சிந்தனையை அருமை ஒருநிலைப்படுத்தி வைக்கவும்,

''என்ன தம்பி அருமை...? உனக்கு என்னிலும் ஐமிச்சமிருக்கோ' என்று சிவகாருணியம் மாஸ்ரர் கேட்டுவைக்கவும் சரியாக இருந்தது.

'உங்களிலை எனக்கு சமுசயமில்லை வாத்தியார்...'' ஒரு கையிலை கத்தியும்... ஒரு கையிலை சாப்பாடுமெண்டு, எங்களை நல்லாய் அகதி அரிசியிலை ஊறவைச்சு, கத்தியாலை வெட்டித் தள்ளுறுங்கள் இந்தப் பாவி அரசாங்கம் தாற கர்ம அரிசிதான் போய்த் துலைஞ்சாலும் துலையட்டும்...'' என்றபடியே அருமை எழுந்துபோய் விடுகின்றான்.

அப்பொழுது தான் நெஞ்சில் ஆறுதல் வந்து உள்வீட்டுக்கு போனார் சிவகாருணியம் மாஸ்ரர். செவிகளில் ஸ்ரோர் ரூமிற்குள் அவரது மனைவி மாணிக்கம், அருமையின் அகதி அரிசியை மத்தியானச் சமையலுக்காகச் சுளகில் அளந்து போடும் சத்தம் வந்து விழுகிறது.........

அருமையை அருமையாகப் பேய்க்காட்டிவிட்டேனென்ற ஒருவித சிறுமையான பெருமையோடு மனைவிக்கு முன்னால் போய் நின்றவர் இன்றையசமையலுக்கு இந்த அகதி அரிசிக்குப் பத்தியமாகக் குளிர்ப்பெட்டியில் வைத்திருக்கும் பன்றி இறைச்சி வற்றலைச் சமைக்கும்படி சொல்லிவிட்டு—

கலவரமடைந்த மனதோடு ஹோலுக்குள் சாய்வு நாற்காலியில் வந்து படுத்துக்கொண்டவர், தாழப்பறந்து வரும் ஹெலியின் இரைச்சலைச் சகிக்க முடியாதவராக எழும்பி இருக்கின்றார். புதிதாக அமைக்கப்பட்ட முகாமிலிருந்துஷெல்லொன்று பேரிரைச்சலோடு வெடித்து அதிர்ந்ததும் அப்பிடியே சாய்ந்து விடுகின்றார். '......இந்தப் படையினர் இவ்வளவு கொடுமைகளையும் செய்தார்கள். கோயில்களைக் கூட அழித்தனர். அவர்களுக்கு என்ன துன்பம் வந்தது...?' இப்படியெல்லாம் தனக்குள் கேட்டுப் பார்த்துக் கொண்டார் சிவகாருணியம் மாஸ்ரர்.

இப்படி அருமையின் அகதி அரிசியைத் தான் அபகரித்தமைக்குத் தமக்கு என்ன துன்பம் வரப்போகின்றதென்ற துணிவில் உற்சாகப்பட்டபோது, மறுபடியும் ஷெல்லின் பேரிரைச்சல் வீட்டுக் கதவுகளை அதிரவைத்து அவரையும் எழும்ப வைத்த போது... 'வாத்தியார் ...?' என்ற பழக்கப்பட்ட குரலொன்று வீட்டு வாசல் பக்கத்திலிருந்து ஆட்டிலரி ஷெல்லாகப் பாய்ந்து வந்தது.

'இந்த ஆய்க்கினை விழுவான் இந்த அகதி அரிசியைச் சுத்திக்கொண்டு தான் ஆவியாக நிக்கப் போறானென்று மனதிற்குள் திட்டிக்கொட்டிய படியே திடுக்காட்டத்தோடுவாசலடிக்கு மாஸ்ரர் வந்தபோது,வாசலில் கண்ணாடித் தொட்டியில் குஷியாக ஓடிவிளையாடிக் கொண்டிருந்த வர்ண மீன்களின் விளையாட்டில் தன்னை மறந்து இரசித்துக் கொண்டிருந்த அருமை பயபக்தியோடு எழுந்து நின்றபோது,

'என்ன தம்பி...... அருமை? உன்ரை அரிசியைத்தான் படையினர் கொண்டு போட்டாங்களெண்டு' மாஸ்ரர் தொல்லை தொடரப்போகின்றதே என்ற பயக்கெடுதியில் அலட்டத் தொடங்க, 'இல்லை வாத்தியார்...நானதுக்கு வரேல்லை......' என்று அருமை இடையில் குறுக்கிட்டபோதுதான் கல்லொன்றை நெஞ்சிலிருந்து விழுத்தி விட்டதைப்போல், பெரிய ஆறுதலடைந்தார் மாஸ்ரர்.

கேற்றடியைப் பார்த்துவிட்டு 'ஐயோ' என்று அவலப்பட்டுக் கத்தித் தொலைத்ததும், சில்லிட்டுப்போன அருமை இரு கைகளையும் மேலே உயர்த்தியபடியே நிற்க, 'அடே புலி இரிக்கா...?' என்று கேட்டபடியே உள்ளே நுழைந்த இராணுவம் துப்பாக்கிகளை நீட்டிப் பிடித்தபோது... அகதி அரிசியை நினைத்துக்கொண்டே இரு கைகளையும் மேலே உயர்த்தினார் சிவகாருணியம் மாஸ்ரர்.

தமது கண்களுக்கு முன்னாலேயே தமது வீட்டிலுள்ள கோழிகள் முதற்கொண்டு, நகைகள், பணம், டி. வி. டெக் முதலிய அத்தனை பொருள்களையும் கொள்ளையடித்ததோடு, ஒரு இராணுவவீரன் ஸ்ரோர் ரூமிறகுள் போய் பெரிய உரப்பையோடு வைக்கப்பட்டிருந்த அருமையின் அகதி அரிசியை இழுத்து வந்து எடுத்துச் செசன்றான்.

'களவெடுக்கக் கூடாதென்று படிப்பித்த வாத்யாரும்... களவு தான எடுத்துப் போட்டார்......!?' என்றெல்லாம காறித்துப்பிக் கொண்டான் அருமை.

படையினர் தன்னுடைய வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டுபோக அருமை தன்னுடைய மானம் மரியாதையெல்லாம் அகதி அரிசியோடு சேர்த்து எடுத்துப் போகின்றனே...... என்றெல்லாம மனதிற்குள் படும்மாசமாக அழுது குளறினா சிவகாருணியம மாஸ்ரா.

கடைசியில்... நாளைக்குக் காய்சச வீட்டில் அரிசி இலலையே... என்று குழயபிக கொண்டிருந்த சிவகாருணியம் மாஸ்ரரும் தமகுள் ஒரு அகதியாகிவிடுகின்றார்.

(யாவும கறபனை)

- தையிட்டி அ. இராசதுரை -

# ஆகஸ்ட் - ஒக்டோபர் கால இடைவெளிக்குள் தீர்வுக்கு வழி கிட்டும்

இலங்கையின் இராசி துலாம் எனின் ஆட்சிக் கிரகம் வெள்ளி, உச்சக்கிரகம் சனி, சிறுபான்மை இனத்திற்குரிய கிரகம் வியாழன், சத்துருஸ்தானத்திற் குரிய கிரகம் வியாழன்.

இவற்றின் பிரதிபலிப்பால்

(அ) வியாழன், சனி, கோசர பலன்கள் கடும் பாதிப்பை உண்டு பண்ணுகின்றன.

(ஆ) சிறுபான்மை இனத்தவரான தமிழரை இலங்கை அரசு எதிரியாகக் கொள்கிறது. (இரண்டிற்கும் வியாழனே அதிபதியாக உள்ளதால்)

இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை வியாழன் 2ஆம்இடத்தில்இருந்தார். அப்போது தமிழர்களுக்கு சிங்களவர்கள் மத்தியில் செல்வாக்கு இருந்தது. உயர்பதவிகள் பல வகித்தனர்.

சுதந்திரம் பெற்ற மறுநாள் (5. 2. 1948) வியாழ மாற்றம் இடம் பெற்றது. வியாழன் இலங்கை அரசிற்கு 3ஆம்இடத்திலும், தமிழருக்கு சென்மத்திற்கும் வந்தார்.

அன்றில் இருந்து சிறுபான்மை இனத்திற்கு மனம் கோணும் விதத்தில் இலங்கை அரசு செயற்பட்டது.

20. 8. 1948ஆம்தேதி, நாடாளுமன்றத்தில் இலங்கைப் பிரசா உரிமைச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனால் தமிழர்களின் மனம் புண்பட்டது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் அதனை ஆதரித்ததையொட்டி, தமிழ் மக்களது தலைவர்களிடையே பிளவு தோன்றி தமிழரசுக் கட்சி உதயமாக வழியேற்பட்டது.

வியாழனுடைய அவ் கோசர பலன் அவ்வாறு அமைந்தபோதும் சனீஸ்வரனுடைய கோசர பலன் இரு சாராருக்கும் சிறப்பாக இருந்ததனால் (சிங்க இராசியில் தமிழினத்திற்கு 9ஆம் இடத்திலும் இலங்கைஅரசிற்கு11ஆம் இடத்திலும்) பெருமளவிலான பாதிப்பு ஏற்படவில்லை. மாறாக சில நன்மைகள் உண்டாகின.

(அ) காங்கேசன்துறையில் சிமெந்து தொழிற்சாலை.

(ஆ) வாழைச்சேனையில் காகிதத் தொழிற்சாலை.

(இ) புல்மோட்டையில் இல்மனைட்தொழிற்சாலை

(ஈ) பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை.

இவற்றினால் இலங்கை அரசிற்கு பொருளாதார முன்னேற்றம். தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு.

இரு சாராருக்கும் கோசர ரீதியில் நல்ல நிலையில் இருந்தபோது நன்மையைச் செய்த சனீஸ்வரன் தீய இடத்தில் இருந்தபோது பெரும் தீமைகளைச் செய்யவும் தவறவில்லை.

20. 12. 1955 — 24. 12. 1958, இக்காலம் இலங்கை அரசியலில் மறக்க முடியாத பல சம்பவங்கள் இடம் பெற்ற காலமாகும். சனீஸ்வரன் விருச்சிக இராசியில் இருந்து, இலங்கை அரசாங்கத்திற்கு 7½சனியன் கடைக்கூறின் பலனையும் தமிழினத்திற்கு 7½ சனியின் முதற் கூறின் பலனையும் கொடுத்த கஷ்டமான காலமாகும். அதாவது இலங்கையில் இனப்பிரச்சினை தலைவிரித் தாடிய காலமாகும். (தற்போதும் 13. 2. 1988 வரை அத்தகையநிலையே நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. அதனைப் பின்னர் ஆராய்வோம்)

(அ) 5. 5. 1956 பி. ப 2 00 மணிக்கு தனிச் சிங்களச்சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது.

(ஆ) ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது.

(இ) பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

(ஈ) தமிழ் மக்களது மனத்தில் இன்றும் மாறாத வடுவாக உள்ள ஜே. ஆர். அவர்களின் பாதயாத்திரை.

(உ) 1958 ல் ஏற்பட்ட இனக்கலவரத்தில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் சொத்துக்கள் சூறையாடப்பட்டும் வந்தன.

இலங்கையின் இராசிக்கும் 7ஆம் வீட்டில் சனீஸ்வரன் இருந்த போது, பெரும்பான்மை இனமான சிங்கள மக்கள் மத்தியிலே பிரிவு ஏற்பட்டது, சேருவாரா கலவரம் உண்டானது. ஏராளமான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். நாட்டின் ஜனநாயகத்திற்கே ஆபத்து ஏற்பட இருந்தது எனினும் வியாழன் கோசர ரீதியில் 2ஆம் இடத்தில் இருந்ததால் அப்பிரச்சினையை இலங்கைஅரசால் வெற்றி கொள்ள முடிந்தது.

1972இல் சனீஸ்வரன் அட்டமத்திலும் வியாழன் 3 ஆம் இடத்திலும் இருந்தார். இலங்கையின் புதிய அரசியல் சாசனம் நடைமுறைப்படுத்தப் பட்டதனால் முன்பு இருந்த அரசியல் சாசனத்திற்குச் சாவு மணி அடிக்கப்பட்டது. 1948ல் நடைமுறைக்கு வந்த அரசியல் நடைமுறை அற்றுப்போய் விட்டது. சிறுபான்மை மக்களுக்கு சாதகமானதாக இருந்து வந்த 29ஆவது சரத்தும் ஒழிக்கப்பட்டது. இது வியாழன்அரசிற்கு 3ஆம் இடத்திலும் சிறுபான்மை இனத்திற்குச் சென்மத்திலும் இருந்ததனால் ஏற்பட்ட விளைவாகும்.

தற்காலத்திற்கு வருவோம்.

வாக்கிய பஞ்சாங்கப்படி 88 ஏப்ரல் 12 ஆம் திகதிவரையுள்ள வியாழன், சனி, இராகு, கேது கிரகங்களின் நிலை ஜூன் 18 முதல் ஒக்டோபர் 24 வரை வியாழனை ... (6 ஆம் பக்கம் பார்க்க)

> 1988 பெப்ரவரி 12 ஆம் திகதியின் பின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு சுமுக நிலை தோன்றும். தமிழினத்தின் தேவையையும் பூர்த்தி செய்யத் தக்க வகையில் ஓர் தீர்வு தோன்றும்.

சோதிடம்

கற்கோவளன்

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## "டிப்" வாங்க சீன அனுமதி

'டிப்' வாங்குவதற்கு சீன அனுமதியளித்திருக்கின்றது.

சோஷலிச விரோத செயல் என்று முன்னர் இதற்கு சீன அரசு தடைவிதித்திருந்தது.

உல்லாசப் பயணத் துறையின் தரத்தைக் கூட்டுவதற்காக 'டிப்' முறைக்கு அனுமதியளிப்பதாக சீன அரசு இப்போது அறிவித்திருக்கின்றது.

உல்லாசப் பயணத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் இனி வெளிநாட்டு உல்லாசப் பயணிகளிடம் இருந்து 'டிப்' (சந்தோஷம்) வாங்கலாம்.

இப்படி 'பீப்பிள்ஸ் டெய்லி' தினசரி செய்தி வெளியிட்டிருக்கின்றது.

-ரத்தி

## நம்பர்வண் (1) செல்வந்தர்

உலகிலேயே நம்பர்வண் (1)செல்வந்தர்என்ற பட்டம் ஜப்பானியர் ஒருவருக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவரின் சொத்துக்களின் பெறுமதி 8 ஆயிரத்து 100 கோடி ரூபா என்று 'போர்ப்ஸ்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இச்செல்வந்தரின் பெயர் யோசியாகிசுட்சுமி, வயது 53. ரயில் நிலையங்கள், உல்லாசப் பயண நிறுவனங்கள், பல ஹோட்டல்கள், பேஸ்போல் மைதானம் முதலியன இவருக்கு டோக்கியோவில் உண்டு. ★

## மலையேறும் மூதாட்டி

91 வயதான பாட்டி ஒருத்தி இம்மாதம் 21 ஆம் திகதி ஜப்பானில் உள்ள பியூஜிமலை மீது ஏறத்திட்டமிட்டிருக்கின்றார்.

உள்ளூரில் இவரை' விட்னி பாட்டி' என்று செல்லமாக அழைப்பர்.

அமெரிக்காவில் உள்ள மிக உயர்ந்த மலையின் பெயர் விட்னி.

இந்த மலையை ஏறிவெற்றி கண்டவர் இந்தப் பாட்டி

இவரின் கணவர் ஒரு டாக்டர். பாட்டி தனது 40 ஆவது வயதில் நிமோனியா சுரத்தினால் பீடிக்கப்பட்டார். அதன் பின்னர் அவரின் உடலில் தளர்ச்சி ஏற்பட்டது.

மலை ஏறி வந்தால் மீண்டும் உடல் பலம் பெறலாம் - இப்படி டாக்டரான கணவர் ஆலோசனை கூறினார்.

அதைத் தொடர்ந்தே பாட்டி மலை ஏறத் தொடங்கினார்.

40 வயதில் மலை ஏறத் தொடங்கிய பாட்டி, கணவனை இழந்து தனியனான பின்னரும், மலை ஏறுவதைக் கைவிடவில்லை.

91 வயதிலும் மலைஏறப் போகின்றார்.

- ரத்தி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விபுலானந்தர் உயிருடன் இருந்தால்... ஈழத்தின் டுட்டுவாகிப் போராடுவார்!

ஈழத் தமிழகத்தின் வலப்புறத்தே அமைந்த மட்டக்களப்பின் தென் கோடியான காரைதீவில் பிறந்த மயில் வாகனன் இவ்வுலகில் வாழ்ந்த காலம் ஐம்பத்தியைந்து ஆண்டுகள், எனினும் அவர் செய்தபணி இன்னும் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமேல் நிலைத்து நிற்கும்.

திசையறிகருவியின் முன் எப்போதும் வடக்கு நோக்கி நிற்பதுபோல் மயில்வாகனன் தனது ஆரம்பகல்வியை காரைதீவில் பெற்றதன்பின்

> "பொருளாதார சுதந்திரம் இல்லாத அரசியற் சுதந்திரம் வெறும் சாரமற்ற நிழல்"—என்று வர்ணித்தார் விபுலானந்த அடிகளார்.

வடக்கே கலமுனை சென்று தனது ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்தார். பின் மட்டக்களப்பு சென்று அங்கிருந்து வடக்கே திருகோணமலைக்கேகி, அங்கிருந்து வடக்கேயுள்ள யாழ்ப்பாணம் வந்து, மீண்டும் வடக்கே சென்னை சென்று தமிழ்ப்பணி செய்து இராமகிருஷ்ண மடத்தினைச் சார்ந்து பிரபோத சைதன்யராகி மேலும் வடக்கேயுள்ள இமயமலைச்சாரல்சென்று சுவாமி விபுலானந்தர் எனும் துறவறப் பெயரைப்பூண்டார்.

அடிகளாரை ஓர் நல்லாசிரியனாக, தமிழறிஞனாக, விஞ்ஞானியாக, கல்லூரி முதல்வராக, பாடசாலைகளின் முகாமையாளராக, பத்திராசிரியனாக, பல்கலைக்கழக வித்தகாசிரியனாக, தமிழ் இசையின் பாரம்பரியத்தை ஆராய்ச்சிசெய்த இசைவல்லுனராக எல்லாவற்றிலும் மேலாக 'யாழ்நூல்' தந்தமேதையாக ஒவ்வொருகோணத்திலும் நோக்கலாம்.

எனினும் அவர் இலங்கைத் தீவின் சுதந்திரத்திற்காக முதல் குரல் கொடுத்த அமைப்பின் தொண்டனாகவும், தேசியவாதியாகவும், பொருளாதார நிபுணனாகவும் சமயத்துறையில் ஓர் சமரசஞானியாகவும் செயல்பட்டதை பலர் அறியாமலிருக்கிறார்கள்.

## வாலிபர் மாநாடு

ஆங்கிலேயன் ஆட்சியும் ஆங்கிலக் கல்வியும் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். ஆங்கிலேயனின் ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த போது எந்த சிங்கள மகனாவது தாய்நாட்டின் சுதந்திரம்பற்றிச் சிந்திக்கவில்லை. இந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் ஒருசில வாலிபர்கள் ஒன்றுகூடி இத்தீவின் சுதந்திரம்பற்றி அடிக்கடி சிந்தனை செய்தார்கள்.

இவ்வாலிபர்களின் மத்தியில் உலக வாழ்வினை நீங்கித் துறவறம் பூண்ட சுவாமி விபுலானந்தரும் காணப்பட்டார். இவர்களது சிந்தனையிலிருந்து உருவாகிய யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் (பின் வாலிபர் காங்கிரஸ் என அழைக்கப்பட்டது) 1924 ஆம் ஆண்டு நவம்பர் முதற்தேதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

## தலைமையுரை

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் நான்காவது தேசிய மாநாடு 1928ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கீரிமலையில் வைத்திய லிங்கம் மடத்தில் இடம் பெற்றது. இந்த எழுச்சியும் உணர்ச்சியும்பெற்ற தேசிய மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர் சுவாமி விபுலானந்தர் ஆவர். இன்னொருவகையில் இந்த மாநாடு சிறப்புப்பெற்றிருந்தது. இந்திய சுதந்திரப் போராட்ட வீரனும் சுயராஜ்யக்கட்சியின் உபதலைவருமாகிய சிம்மக் குரலோன் ஸ்ரீ.எஸ். சத்தியமூர்த்தி முக்கிய பேச்சாளராக வருகை தந்திருந்ததே.

அத்துடன் இலங்கைத் தொழிற்கட்சித்தலைவராயிருந்த ஏ. ஈ. குணசிங்காவும், பௌத்த பாரம்பரியத்தைகட்டிவளர்த்த நாலந்தா கல்லூரியின் அதிபராகிய ஜி. கே. டபிள்யூ. பெரேரா போன்ற சிங்களத் தலைவர்களும் பேச்சாளராய் பங்குபற்றினார்கள்.

இந்த பிரசித்த மாநாடு இலங்கையின் சுதந்திரம் பற்றியும், சமூக, பொருளாதார விடயங்கள் பற்றியும் கூர்மையாக ஆராய்ந்தது. அத்துடன் 'மாண்வர் காங்கிரஸ் வெற்றி பெற எனது நல்வாழ்த்துக்கள், உங்கள் தாய் நாட்டில் வாழும் கோடானுகோடி தரித்திர நாராயணர்களை மறந்து விடாதீர்கள். கதர் இயக்கத்தை ஆதரிப்பது மூலம் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்' என மகாத்மா காந்தியினால் அனுப்பப்பட்ட செய்தியும் அடிகளாரினால் வாசிக்கப்பட்டது.

டொனமூர் கமிஷன் அறிக்கை பூரண சுதந்திரம் வழங்க சிபார்சு செய்யாதபடியால் நிராகரிப்பதென இத்தேசிய மாநாடு முடிவு செய்தது, இப்படியான முக்கியத்துவம் வாய்ந்த தேசிய மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் அடிகளார் என்பதினால் அவரின் சுதந்திர உணர்வினை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அடிகளாரது தலைமையுரை கல்வி, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் புதிய சிந்தனையைத் தூண்டி விட்டது. காந்திஜியின் போதனைகளுக்கிணங்க சமய ஒற்றுமையை வற்புறுத்திப் பேசிய அடிகளார் கல்வித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இலங்கையிலே சர்வகலாசாலை அமைப்பதை வரவேற்றுப் பேசியபொழுது அங்கு தமிழும் இந்திய வரலாறும் முக்கிய இடத்தினைப் பெறவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பொருளாதார சுதந்திரம் இல்லாத அரசியற் சுதந்திரத்தை வெறும் சாரமற்ற நிழலாக இருக்குமென வர்ணித்தவர். வறுமையுங் கல்வியின்மையும் சமூகத்தின் சாபக்கேடுகள் என வர்ணித்த அவர் மலையக தமிழ் மக்களின் கல்வியில் ஏனைய தமிழ் மக்கள் அக்கறை கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

## சமய ஒற்றுமை

ஆங்கிலக் கல்வியும் மதமாற்றமும் இந்துக்களிடையே சில கசப்புணர்வை ஏற்படுத்திய பொழுது சமய சமரசத்தை வலியுறுத்தியவர் இந்துக்களை அமைதியாகவும் அடக்கமாகவும் சேவையில் ஈடுபடும்படி வேண்டியதோடு இலங்கையின் எல்லா இன மக்களும் மதவேறுபாடின்றி ஒன்றுபட்டு தாய்நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபடும்படி வேண்டி தலைமையுரையை முடித்துக் கொண்டார்.

இவ்வாறு தேசியத்திலும், சர்வதேசியத்திலும், மானிடத்திலும் பற்றுக் கொண்டிருந்த அடிகளார் இன்றிருந்தால் இங்கு நடைபெறும் மனித நேயமற்ற பேரினவாத அழிவுகளை எப்படி நோக்கியிருப்பார்? தமிழர்களின் அவல நிலையினை அகற்றுவதற்கு சில சமயம் பிவுப் மக்கோரியசாகவோ அல்லது பிவுப் டுட்டுவாகவோ மாறி சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கெதிராகப் போராடியிருப்பார். ✶

-- ஊரெழு முத்துக்குமாரசாமி --

### உள்ளக் கமலம்

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடி யிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.
காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது

—விபுலானந்த அடிகள்

---

# ★ அங்கஹீனத்தை 'அரெஸ்ட்' செய்வதற்கு ★ இப்போதுண்டு நவீன பிளாஸ்டிக் சிகிச்சை முறை!

'கருவுற்று இருக்கும்போது கிரகண சமயத்தில் வெளியே போயிருப்பாள்—அதுதான் மூளியுடன் குழந்தை பிறந்திருக்கிறது'—

பிறவியிலேயே உருவகக் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளைப் பார்த்து யாரும் இப்படிச் சொல்ல வேண்டிய தேவையில்லை இனி!

'ஒரு காதே இல்லாமல் குழந்தை பிறந்திருக்கிறது. அதுவும் பெண். ஐயோ பாவம்' என்று பரிதாபப்படவும் தேவையில்லை.

'பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர் என்று அழைக்கப்படும் கலியுலகப் பிரம்மாக்கள் இப்போது இந்தக் குறைபாடுகளை மிகச் சுலபமாக சரி செய்து கொடுத்து விடுகிறார்கள்!

'பிளாஸ்டிக்' எனும் வார்த்தைகிரேக்கமொழியிலிருந்து பிறந்தது. 'பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைஎன்றஇந்த அறுவைச் சிகிச்சை பிறந்த இடம் எது தெரியுமா? அதிசயப்படாதீர்கள் — இந்தியா தான்! சுச்ருதர் எனும் நமது பண்டைய பெரும் வைத்தியர்தான் இந்த அறுவைச் சிகிச்சையை உலகிலேயே முதலில் செய்தவர். (பிளாஸ்டிக் சிகிச்சையில் — ஒரு முறையாக சுச்ருதர் கையாண்ட வழி இன்றும் மேல் நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

'பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை' என்றுவே சினிமா நடிகைகள் மூக்கை ஆபரேஷன் செய்து அழகாக்கிக் கொள்வதையும், வயதான நடிகர்கள்—முகச் சுருக்கத்தைப் போக்கிக் கொள்ள ஃபேஸ் லிஃப்ட் (Face Lift) செய்து கொள்வதும்தான் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் இந்த அறுவைச் சிகிச்சையின் முக்கிய நோக்கம்— செயலிழந்து போன அவயவங்களை— ஓரளவாவது — செயல்பட வைப்பதுதான்!

விபத்தினால் ஏற்படும் அங்கவீன குறைபாடுகளை இந்த அறுவை சிகிச்சை மூலம் சரி செய்துவிட முடியும்.

இதில் என் சொந்த அனுபவமே உண்டு.

ஒரு திருமணத்தின் போது, பேச்சு சுவாரஸ்யத்தில் என் தங்கை குழந்தையை (ஒன்றரை வயது ஆண் குழந்தை) கவனியாமல் விட்டு விட்டோம். திடீரென்று 'வீல்' என்று அலறல்! இரும்புக் கதவில் குழந்தை கையை வைத்து மூடிக் கொண்டதில், வலது கை ஆள் காட்டி விரல்-பாதி துண்டாகிக் கீழே விழுந்து விட்டது. துண்டான விரலை எடுத்து வைத்துக் கொண்டு - குழந்தையுடன் ஒரு பிளாஸ்டிக் நிபுணரிடம் ஓடினோம். உடனே விரலைப் பழையபடி சேர்த்து வைத்துத் தைத்து விட்டார். இருபது நாளில் - தையல் அடையாளம் கூடத் தெரியாமல் பழையபடி ஆகி விட்டது விரல்.

விபத்துகள்குழந்தைகளுக்கு மட்டும்தானா ஏற்படுகிறது?

ஃபாக்டரியில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு விரல்கள் வெட்டப்படுவதோ, கையோ, காலோ துண்டிக்கப்படுவதோ எதிர்பார்க்கக் கூடிய விபத்துத்தான். இவர்களுக்குக் கையோ, காலோ, விரல்களோ பழையபடி உபயோகப் படும்படி செய்வது இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் சாத்தியம்தான்.

புகழ்பெற்ற ஒரு பிளாஸ்டிக் நிபுணர் கூறும் அறிவுரை:- 'வெட்டுண்ட அவயவத்தை சுத்தமான பிளாஸ்டிக் பையில் போட்டுக் கொண்டு வர வேண்டும். இல்லாவிடில் சுத்தமான துணியில் சுற்றிக்கொண்டு வந்தால் கூடப் போதும்! ஆனால் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரம் ஆபரேஷன் செய்யப்படுகிறதோ அவ்வளவுக்கு 'ரிஸல்ட்' நன்றாக அமையும்.

★ இயற்கையாக இல்லாவிடினும் விபத்தில் இழந்து விட்டாலும் கவலையை விட்டு விடுங்கள்..... ★

விபத்தினால் ஏற்படும் விபரீதத்தை மட்டுமல்லாமல், வியாதியால் ஏற்படும் குறைபாடுகளையும் இந்த சாஜரியின் மூலம் சரிசெய்ய முடியும்.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட கால், கை, விரல்களை பிளாஸ்டிக் சர்ஜரியின் மூலம் பழையபடி உபயோகிக்கும்படி செய்ய முடியும். ஆனால் எவ்வளவு தூரம் அந்தஅவயவம்பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் சிகிச்சையின் பலன் அமையும்.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட புருவங்கள், மூக்கு, உதடுகள் இவற்றையும் ஓரளவுக்கு சரி செய்ய முடியும்.

வாயில் புற்றுநோய் அதற்கான அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு முகம் பாதிக்கப்படும்போது, பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் முகத்தை ஓரளவுக்குப் பழையபடி மாற்ற முடியும்.

ரூமேடாய்ட் ஆர்த்ரைடிஸ் (Rheumatoid Arthritis) காரணமாகப் பாதிக்கப்பட்ட (மடங்கிய விரல்கள் போன்றவை) அவயவங்களையும் இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் சரி செய்யலாம். யானைக்கால் வியாதி வந்தவர்களும் பழையபடி சாதாரண மனிதக் காலுடன் உலாவலாம்!

நெருப்புக்காயம் பட்டு உருமாறியவர்களுக்கு 'பிளாஸ்டிக் அறுவைசிகிச்சை ஒருவரப்பிரசாதம்.

களிமண் மிக மோசமாக இருந்தால் பொம்மை செய்பவனுடைய திறமையும் கட்டுப்படுத்தப்படும். அதுபோலத்தான் நோயாளியின்பாதிப்பு மிக மோசமாகஇருந்தால் ஓரளவுக்குத்தான் பலன் கிட்டும்.

பிறவியில் ஏற்படும் கோளாறுகளைத்தவிர்க்க இவர் கூறும் சில ஆலோசனைகள்:-

கர்ப்பிணிகள்— முதல் மூன்று மாதத்தில் வைத்திய ஆலோசனை இல்லாமல் எந்த விதமான மருந்துகளும் உட்கொள்ளக் கூடாது. கர்ப்பமாயிருக்கும் போது, அம்மை வந்தாலோ சில 'வைரஸ் ஜுரம்' வந்தாலோ - அல்லது 'எக்ஸ்-ரே' எடுத்துக் கொண்டாலோ - பிறக்கும்போது குழந்தை - பிளவுண்ட உதடு போன்ற குறைபாட்டுடன் பிறக்க வாய்ப்பு உண்டு'

இம்மாதிரிக் குறைகளை பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்திவிட முடியும். குழந்தைகளுக்கு மூன்று மாதம் ஆன பிறகு இதைச் செய்யலாம்.

குழந்தை பள்ளிக்குச் செல்வதற்கு முன் இம்மாதிரிக் குறைபாடுகளை சரிசெய்து விடுவது நல்லது. இது அக்குழந்தை தன்னுடைய உருவக்குறைபாட்டை நினைத்துத் தன்னைப் பற்றி தாழ்வாக நினைப்பதைத் தடுக்க உதவும்-

பிளாஸ்டிக் சர்ஜரியின் ஒரு பகுதிதான் 'காஸ்மெடிக் சர்ஜரி' (Cosmedic Surgery).

இது பெரும்பாலும் அழகுக்காக செய்யப்படுகிறது. வயதானவர்களுக்கு முகத்தில் சுருக்கம் விழும்போதோ அல்லது தளர்ந்து போகும்போதோ சுருக்கத்தையும், தளர்வையும் நீக்கி, முகத்திற்கு மீண்டும் இளமைத் தோற்றத்தைக் கொடுக்க முடியும்.

சிறிய மார்பகங்களைப் பெரிதாக்கிக் கொள்வதும், பெரிதான மார்பகங்களைச் சிறிதாகச் செய்து கொள்வதும் இதில் அடங்கியதே!

உடலில் சில பகுதிகளில் சேரும் அளவுக்கு மீறிய சதையைக்குறைப்பதும்பிளாஸ்டிக்சிகிச்சையின் மூலம் சாத்தியமே. ஆனால் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உணவுக் கட்டுப்பாட்டில் இருந்தால்தான் திரும்பவும் உடல் பருக்காமல் இருக்கும்.

-- சுசிலா ரவிச்சந்திரன் --

நன்றி: சுமங்கலி ✶




---

# சாபமிட்டார் சட்டம்பியார்!

வாரமுதல் நாள் திங்கட்கிழமை வழமையாக கச்சேரி களை கட்டும் நாள். பொதுமக்கள் தம் தேவைகளுக்காக வரும் நன்னாள் கச்சேரி "கொறிடோர்"களில் சனநெரிசல். அதுவும் ஓய்வூதியங்களை என்றால் சொல்லவும் வேண்டுமா?

முதல்பென்சன் எடுக்க வருவோர், எடுக்கத்தவறிய பென்சன் எடுக்க வருவோர், வங்கி மாற்றம் செய்பவர், இறந்தவர் பென்சன் எடுக்க வருவோர் என்று பலரும் சூழ்ந்திருந்தனர். பதில் சொல்ல முடியாது திகைத்து, இருப்பார் எழுதுவினைஞர்கள்; வயது போன காலத்தில் அவர்களுக்குத் திரும்ப திரும்பச் சொன்னாலும் விளங்காது. தங்களுடைய பென்சனைத் திருடிக் கொள்வதாக நினைப்பு.

கடந்த காலத்தில் ஏற்பட்ட ஊழல். நிகழ்காலத்தில் கடமை செய்பவரையும் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலையை உருவாக்கிவிட்டது. தவறு செய்பவர் தண்டனையிலிருந்து தப்பி விடுவர். நிரபராதிகள் தண்டிக்கப்படுவது இயற்கை. பென்சன் கிளை திறமையாக இயங்கினாலும் பட்டமறுவில் மாற்றமில்லை.

அன்று தமிழ் சட்டம்பியார் ஒருவர் தமதுமுதல் பென்சன் அலுவலாக வந்திருந்தார். சட்டம்பியார் பற்றி சொல்லத் தேவையில்லை. நல்ல சுத்த தமிழ் அறுத்துறுத்துப் பேசு

(6ஆம் பக்கம் பார்க்க)

- லோகன் -

---

# ஈழத்துப் பாரதிதாசனுக உவமானம் செய்யப்பட்ட ஈழத்து அ.ந. கந்தசாமி

ஈழத்து முற்போக்கு மறுமலர்ச்சியாளரான அ. ந. கந்தசாமி இளமை முதலே பாரதிதாசனைத் தமக்கு வழிகாட்டும் முன்னோடிகளுள் ஒருவராகவும் தங்க மாங்கனியாகவும் கொண்டிருந்தார். 1967 ஆம் ஆண்டிலும் கூட இதனை அ. ந. க. மறக்காமல் - மறுக்காமல்- பின்வருமாறு (மல்லிகை- இதழ் 12) குறிப்பிடுகின்றார்;

> 'இருட்டறையில்
> உள்ளதடா உலகம்சாதி
> இருக்கின்ற
> தென்பானும்
> இருக்கின்றானே'

என்ற பாரதிதாசனின் கவிதை என் நெஞ்சை ஆவேசத்தோடு ஊடுருவி நின்ற காலமது'

இக்கட்டுரையில் பாரதிதாசனை மட்டுமன்றிப் பாரதியார், தேசிகவிநாயகம்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆகியோரையும் தம்மைப் பாதித்தவர்களாக அ. ந. க. கூறுகிறார். எனினும் பாரதியும் பாரதிதாசனுமே அவரைப் பெரிதும் பாதித்தனர் என்பது அவரது படைப்புக்களிலிருந்து தெரிகிறது.

### மறுமலர்ச்சிக் காலக் கடிதங்கள்: அங்கம் - 2

'பாரதிதாசனைப் பின் [illegible] பதும் அதிகமாக எண்சீர் [illegible] யாண்டனர். பாரதிதாசனின் வெற்றிக் கவிதைகளில் எண்சீர்விருத்தக் கவிதைகளே கணிசமான


அ. ந. கந்தசாமி

தொகை' என்று 20 ஆம் நூற்றாண்டுக் கவிஞர்களில் பாரதிதாசன் ஏற்படுத்திய தாக்கத்தைத் தமிழவன் (இருபதில் கவிதை) கூறுகிறார்.

பாரதிதாசனை ஆதர்சமாகக் கொண்டிருந்த அ. ந. க. எண்சீர் விருத்தத்திலேயே தமது வெற்றிக் கவிதையைப் பாடியுள்ளார் என முருகையன் கூறுவது இங்கு அறியத் தக்கது:

'அ. ந. கந்தசாமியின் 'எதிர்காலச் சித்தன்' பாடலை விடக் கருத்தும் சிந்தனையும் பொதிந்த கவிதைகள் தமிழகத்தில் உள்ளனவா? இருந்தால் எடுத்துக் காட்டட்டும்' என முருகையன் கற்பதம் இதழில் ([illegible]

1971) அறைகூவல் விடுத்துள்ளார். எனவே, அ. ந. க. அவர்களை 'ஈழத்துப் பாரதிதாசன்' எனலாம். (பாரதிதாசனைத் 'தமிழகத்து அ. ந. கந்தசாமி' என்று நீங்கள் குறிப்பிட விரும்பினால் நான் அதனை மறுக்க மாட்டேன்.)

பாரதிதாசனை ஆதர்சமாகக் கொண்டிருந்த அ. ந. க. முந்திய கட்டுரையில் குறிப்பிட்டபடி 'இரட்டையர்' ஈழகேசரியில் (5-11-1944) எழுதிய 'பகுத்தறிவாகுமா?' என்ற கட்டுரையைக் கண்டபோது பாதிப்படைந்ததில் வியப்பில்லை. அக்கட்டுரையைப் படித்த சூட்டோடு அ. ந. க. ஈழகேசரிக்கு மறுப்புக் கட்டுரை எழுதியதோடு 'இரட்டைய'ருக்கும் கடிதம் எழுதினார். அதில் அ. ந. க. பாரதிதாசனைப் பற்றிய தமது கருத்தை இவ்வாறு தெரிவிக்கிறார்.

'பாரதிதாசனது கவிதை இன்றையஉலகத்தின் சிறப்பு. அவர் சிறுகவிகள் எழுதி மகாகவியாகிவிட்ட கவிமன்னன் என்பது எனது தாழ்மையான கருத்து'

இராவணனை அதர்மத்தின் மொத்த வடிவமாகக் கொள்வது இந்து இதிகாச மரபு. அம்மரபு இராமாயணத்தைத் தர்மத்துக்கும் தர்மஅத்துக்கும் நிகழ்ந்த கற்பனைப் போராகக் கொள்கிறது. ஆனால், நவீன வரலாறு இராமாயணக் கதையை ஆரிய- திராவிடப் போரின் கதை என்கிறது. இதுவே அ. ந. க.- 'இரட்டையர்' முரண்பட்டிற்கு அடிப்படையாக அமைகிறது.

'இரட்டையர்' கோபம் கொள்வது பாரதிதாசன் மட்டுமல்ல. அவர் சார்ந்து நின்ற சுயமரியாதை இயக்கம் மீதும் தான். வ. வெ. சு. ஐய

மயிலங்கூடலூர் பி. நடராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தை பிரதிபலித்த கம்பன் விழா

துன்ப சாகரத்தில் மூழ்கிப் போயிருக்கும் யாழ்ப்பாணத்து மக்களுக்கு ஓர் இன்ப விழாவாக-சிந்தனைக்குரிய ஒரு சிறந்த விழாவாக "கம்பன் விழா"வை அமைத்து வழங்கினர்கள் அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர்.

இதுவரை காலமும் நடைபெற்ற கம்பன் விழாக்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று இவ்வாண்டுக்குரிய இந்தக் "கம்பன் விழா"வை அமைப்பாளர் இ. ஜெயராஜும் தலைவர் திரு. தி. திருநந்தகுமாரும் செயலர் திரு. க. குமரதாசனும் ஒழுங்குபடுத்தியுள்ளமையை கம்பன் விழாவைக் கண்டு களித்தவர்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது.

நாட்டுச் சூழல் துன்பகரமாக இருந்தபோதும் இலக்கியமானது சோர்வுற்றிருக்கும் மக்களை ஊக்கப்படுத்தும் என்ற நம்பிக்கையோடு கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம் என்ற உறுதிப்பாட்டுடன் கம்பன் விழாவை நடத்தியது கம்பன் கழகம்.

நாடு இருக்கும் இக்கட்டான நிலையில் இப்படி

**தொகுப்பு:- என். கே. தங்கரத்தினம்**

ஒரு விழாவா? இந்த விழா தேவைதானா? நீ என்ன ஒரு மரமா? அல்லது கல்லுத்தானா? இப்படியெல்லாம் விழா அமைப்பாளர்களை வீதிகளிலும் கண்ட கண்ட இடங்களிலும் கேள்விக் கணைகள் தொடுத்த யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் கம்பன் விழாவைக் கண்டு வாயில் கைவைத்து வாயார வாழ்த்தியதை யார்தான் அறிவார்கள்.

கம்பன் விழா பற்றி தமிழ் மக்கள் புகழ்மாரி பொழியக் காரணம்!

யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பிரபலம் மிக்க - சிறப்புமிக்க நாதஸ்வரக் கலைஞர்களான திருவாளர்கள் ஆர். சுந்தரமூர்த்தி, வீ. கே. கானமூர்த்தி, வீ. கே. பஞ்சமூர்த்தி, எஸ். சிதம்பரநாதன், என். கே. பத்மநாதன், எம். பி. நாகேந்திரம், ஆர். புண்ணியமூர்த்தி குழுவினரின் கானமழை-கலைமழை - இசை விருந்தாளர்கள் அனைவரையும் அருந்தவைத்து விட்டது.

ஆகா! ஆகா!! என்று இந்த மூன்று நாட்களும் ஒரே மேடையில் கேட்டு அனுபவித்த அனுபவத்தை வேறு எங்கணுமே அனுபவிக்க முடியாது!.

இசை மன்னன் நாக—பரமசாமியின் கடவுள் வணக்கப் பாடல்கள் விழா பொலிவு பெற பேருதவி புரிந்ததை நாம் மறந்து விடமுடியாது.

நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய சுவாமிகளும் யாழ். குருத்துவக்கல்லூரி விரிவுரையாளர் அருட் திரு. வின்சன்ற்பற்றிக் அடிகளாரும் ஆசியுரை வழங்கியதைஅடுத்து விழா ஆரம்பமானது.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை பொறியியலாளர் திரு. ம. ஜனநாயகம், கவிஞர் வே. ஐயாத்துரை, பண்டிதர் க. வீரகத்தி, திரு. சி. தியாகராசா ஆகியோர் தொடக்கவுரைகள் நாட்டு நிலைமைகளைக் காட்டுவது போல இருந்தன.

திரு. சி. தியாகராசா (எஸ். ரி. ஆர்) உரையாற்றும்போது யாழ்ப்பாணத்தில் நாடகத்தின் நிலை இருக்கும் தன்

## கம்பன் அமிழ்தம் சுவைத்து "ஊரடங்கு" மறந்த மக்கள்

மையை விளக்கினார். அன்று கலையரசு சொர்ணலிங்கம் போன்றோர் நாடகத்தை நன்றாக வளர்த்து வந்தார்கள் என்றும் இன்று அது அழிந்துவிட்டது என்றும் கலையரசு சொர்ணலிங்கத்தின் பாணியில் நாடகத்தை வளர்க்கவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்.

இவரது பேச்சு இன்றைய புதிய பாணியில் நடிக்கும் நடிகர்களுக்கும் இயக்குநர்களுக்கும் ஆத்திரத்தை ஏற்படுத்தத்தான் செய்தது. இருந்தும் கலையரசு சொர்ணலிங்கத்தின் பாணியில் அமைந்த நாடகம் வளர்க்க ஊக்கமும் பிறந்தது.

கம்பன் விழாவை வந்திருந்த ஜனசமுத்திரத்தைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய ஜெயராஜ் அவர்கள் தமிழ் இந்த நாட்டில் வாழும் என்ற துணிவு தமக்கு ஏற்பட்டிருப்பதாகவும் இன்றைய பயங்கரமான சூழ்நிலையில் தான் இவ்வளவு தொகையான ரசிகர்களை எதிர்பார்க்கவில்லை என்றும் கூறிப் பெருமைப்பட்டார்- இறும்பூதெய்தினர்.

தலைமையுரைகளை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, உதவி அரசாங்க அதிபர் திரு. ச.பொ. பாலசிங்கம், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, முன்னாள் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை பேசும்போது புலனடக்கமே முக்கியமானது என்று இராமாயணம் கூறுகிறதென்றும் புலனடக்கம் இன்மையால் பல சிறப்பும் மிக்க இராவணன் மாற்றான் பெண்ணை விரும்பி சீரழிந்தான் என்றும் கூறியதோடு இராமன், பரதன், இலட்சுமணன், அனுமான் போன்ற பாத்திரங்கள் புலனடக்கத்திற்கு உதாரணங்களாய் தனிச்சிறப்புப் பெறுகின்றனர். ஆக அறம் வெல்லும் மறம் அழியும் என்ற உண்மையை பறைசாற்றுகிறது இராமாயணம் என்றவர்—

காத்திரமான இலக்கிய சிருஷ்டி தாழ்வுற்ற அடிநிலை மக்களை முன்னேற்றும் பல கோட்பாடுகளை உடையதாய் அதேவேளை இன்பம் பயப்பதாகவும் அமைய வேண்டுமென நாட்டிய சாஸ்திரம் கூறுகிறதென்றும் குறிப்பிட்டார்.

திரு. ச. பொ. பாலசிங்கம் கவிதையிலேயே தலைமையுரை நிகழ்த்தும்போது தன்னைமறந்த நிலையில் கவிதைகளைப் பாடினார்.

அருமையான - இனிய பாடல் என்று எல்லோருமே பாராட்டினார்கள்.

இவர்களது பாடல்களிலே இன்றைய நிலைமைகள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

இன்றைய சூழலில் எம்மவர் நெஞ்சில் பெரிதும் பதியவேண்டியது என்ற பொருளில் இடம் பெற்ற பட்டிமண்டபம் இன்றைய நிகழ்வுகளைக் காட்டத் தவறவில்லை மிக அருமையான முறையில் தெளிவுபடுத்தினார்கள்.

சிதையின் உறுதியே என்பது பற்றி திரு. க. நாகேஸ்வரன், திரு. சி. திருநந்தகுமாரும் சுமித்திரை தியாகமே என்று பண்டிதர் க. ஈஸ்வரநாத பிள்ளை, திரு. ந. கணேசமூர்த்தியும் கும்பகர்ணன் வீரமே என்று திரு. ச. ஜெயச்சந்திரன், திரு. ச. சிவகுமாரனும் வாதாடினர்.

இவர்கள் அறுவரும் புலவர் ஈழத்துச் சிவானந்தனை நடுவராகக் கொண்டு இராமாயணத்தை அக்குவேறு ஆணிவேறாக தமது சக்திக்கு எட்டியவரை கருத்துக்களைக் கூறி தமது பக்கத்தை-அணியை விலக்காது பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

விவாதத்தின்போது ஈழத்துச்சிவானந்தன் அமர்ந்திருக்கக் கொடுத்த ஆசனம் மிகச்சிறப்பாகக் காணப்பட்டது. நடுவே ஈழத்துச் சிவானந்தன் அமர்ந்திருக்க இருபக்கமும் வாதாடுவோர் அறுவரும் அமர்ந்திருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ★

# இன்னும் எத்தனை நாட்களுக்குக் கண்ணீரும் கம்பலையும் முருகா!

ஆயிரமாயிரமாண்டுகளாக எமது முன்னோர்களின் நினைவு கூர்ந்து அவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் தத்துவத்தை உள்ளடக்கி நடைபெற்று வருவதே ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவம். இதற்கென எம்மவர்கள் கீரிமலைச் சுனையையும் அதனைச் சார்ந்துள்ள இந்து சமுத்திரக் கடலையும் புனித தீர்த்தங்களாகக்கொண்டு எத்தனையோ கோடி அடியார்கள் இன்றுவரை தீர்த்தமாடி எமது கலாசாரம் போற்றும் புண்ணிய கைங்கரியங்களைச் செய்து ஈடேறியுள்ளனர்.

ஆடி அமாவாசைத் தினத்தில் அங்கு லட்சக்கணக்கிற் கூடும் அடியார்கள் இலங்கையின் எழுதப்பட்ட வரலாற்றுக்கு முன் தோன்றிய மாவைக் கந்தன் தீர்த்தோற்சவத்திற் பங்கு பற்றி அவன் அருட் காட்சியைக் கண்டு களித்து அந்தப் பெரு

**-- ஒருபக்தனின் குமுறல் --**

மான் ஆடிய தீர்த்த சமுத்திரத்தில் தாமும் நீராடி தமது பிதிர்களுக்கு கிரியைகளைச்செய்து அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் நகுலேசுவரப் பெருமானை வணங்கிச் செல்வர்.

இவ்வாண்டு இன்று கூடியுள்ள ஆடி அமாவாசைத் தினத்தில் மாவைக் கந்தனின் அருட்காட்சியையோ நகுலேஸ்வரப் பெருமானின் அருள் நிலையையோ நமது முன்னோர்களுக்குச் சிவனடியார்கள் ஆற்றும் கிரியைகளையோ இப்புண்ணிய க்ஷேத்திரத்திற் காண முடியாத நிலை உண்டு. வரலாற்றுப் புகழ்மிக்க மாவைக் கந்தன் மகோற்சவம் நடைபெறவில்லை.

அலையலையாக வந்து மோதி அடியார்களை அணைக்கும் இந்து சமுத்திர அன்னை பஞ்சாட்சர, சடாட்சர நாமங்களையும் அரோகரா கோஷங்களையும் பஜனைக் கீர்த்தனைகளையும் கேட்டின்புற முடியாத நிலையில் உள்ளாள்.

மாவை ஆதீனப் பிரதம பூசகர் சண்முகநாதக் குருக்கள் கண்ணீர் சிந்திய வண்ணமிருக்கின்றார். அடியார்களும் தொடர்ந்து கண்ணீர் சிந்தியபடியே இருக்கின்றனர்.


பரிமுகத்தை உனது திருவருட் பார்வையினால் மனித முகமாக்கிய அற்புதனே! அடியார்களது குறை தீர்க்கும் அழகனே! மயிலோனே! வேலவனே! இன்னும் எத்தனைநாட்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கவலையுற்ற மனத்துடன் உனது அடியவர்களை வைத்திருக்கப் போகின்றாய்?

வேற்படையே வெற்றிப்படை. அதர்மம் அழியட்டும். அரசியல் பிழைத்தோர் ஆட்சி சரியட்டும். அறம் வளரட்டும். கச்சியப்பர் எடுத்து விளக்கிய கந்தபுராண உண்மை உலகெலாம் பரவட்டும் இவையெல்லாம் நிகழ ஒரு திருமுருகா நீ வந்து உதித்திடுவாய்.

— முருகபக்தர் ★

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 71



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி ..............................

..............................

விலாசம்:- ..............................

..............................

வயது:- ..............................

ஒப்பம்:- ..............................

**இடமிருந்து வலம்**

1. கடவுள், 6. ஆகாயம், 7. இன்று எல்லோராலும் பேசப்படும் ஒரு ஆயுதம், 8. தழுவு, 9. புகழ். 10. குரங்கு, 11. இறுதி எழுத்து சேர்ந்தால் வருவது, குதிரைக்கு இல்லை. 12. மூடை, 14. பெண், 16. பாய்தல், 19. மறைவில் திட்டமிடுவது, 20. இராமன் சீதையைச் சந்தித்த இடம், 21. பாண்டவர் தந்தை, 22. தலையில் இருப்பது. இரண்டையும் குறிக்கும், 23. கேள்வி பதில்.

**மேலிருந்து கீழ்**

1. நீரின் மூன்றுவது நிலை, 2. சடப்பொருள்களின் மூன்று நிலைகளில் ஒன்று, 3. இறைச்சி வாங்குவது இந்தக்கடையில்தான், 4. சேஷ்டை 5. மனைவி, 8. நாட்டில் கூடிக் கொண்டு போகும் தொகையினர், 11. ஒற்றைக்காலில் தவம் செய்பவர், 12. எல்லோருக்கும் உரிய 13. சமையலறை ஆயுதம், 14. கொட்டில் 15. வாதம் செய், 17. அடங்காத்தன்மை 18. காப்பியநாயகி, 19. போர், 21. பாவம் செய்தவன்.

**சொற்சிலம்பம்**
**போட்டி இல. 69 விடைகள்**
**இடமிருந்து வலம்**

1. செண்பகம், 3. ஆதி, 6. சிகாமணி, 9. காது, 11. ஒசாகா, 12. சுயம்பு, 14. நாடகம், 15. அடு, 16, மான், 17. தர 18. பாததூளி, 19. விசுவாசம், 20. கைதி.

**மேலிருந்து கீழ்**

1. செஞ்சிலுவை, 2. கணணி, 4. திண் 5. ஆகாயம், 7. காசா (சாகா) 8. மகாநாடு, 10. தும், 12. சுகந்தம், 13, புதன், 15. அரசு 16. மாளிகை, 17. தவி, 18, பாச.

**சொற்சிலம்பம் போட்டி இல. 69**
**பரிசு பெற்றவர்கள் விவரம்**

முதலாம் பரிசு:- திரு. த. செல்வராசா, அஞ்சலகம், வவுனியா.

இரண்டாம் பரிசு:- திருமதி. றஞ்சிதா நவரட்ணவேல், ஊர்எல்லை வீதி, மீசாலை தெற்கு, மீசாலை.

மூன்றும் பரிசு:- திரு. கே. அரசேஸ்வரன் கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்களின் பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வர வேண்டியதில்லை.

## ஈழத்துப் பாரதி-----

(5ஆம் பக்க தொடர்ச்சி)
ரும் பாரதியும் போற்றிய இராமாயணத்தைப் பாரதிதாசனும் அவர் சார்ந்த இயக்கமும் தூற்றலாமா? என்பதுதான் 'இரட்டையர்' வினு.

ராமாயணமென்ற
நலிவு தருங்கதை
பூமியில் இருப்பதை
இப்போதே அறிகிறேன்

எனப் பாரதிதாசனின் சஞ்சீவி பார்வதத்தின் சாரலில் வரும் குப்பன் கூறுகிறன். 'நலிவு தருங் கதை' என்ற தொடர்தான் 'இரட்டையர்'க்குக் கோபத்தை மூட்டியது.

'தமிழனை இழிவுபடுத்தும் செய்திகள் இராமாயணத்தில் இருக்கிறதா வெருட்சி கொள்கிறது சுயமரியாதை இயக்கம் ஆரியத் துவேஷத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது இந்தச் 'சூனுமானு'க்களின் சூழல்'— இவ்வாறு இரட்டையரின் விமர்சனத்தில் தீப்பொறி பறக்கிறது.

ஆனல், அ. ந. க. பாரதிதாசன் கருத்தினர். எனவே, இக்கருத்துப் பற்றிய பல நூல்களைப்படிக்கும்படி தமது கடிதத்தில் 'இரட்டையர்' களுக்கு அவர் பரிந்துரைசெய்கிறர். ஆனல், அவருடைய முக்கிய மனக்குறை அதுவல்ல. முதல்முதலாகப் பாரதிதாசனை ஈழத்துத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் 'இரட்டையர்' பாரதிதாசனது சிறப்பையும் குறைபாட்டையும் சமநிலையிற் கூறியிருக்கவேண்டும் என்பதே அவர் வாதம்.

**பண்ணுடை மனப்பான்மை**

மந்திய கட்டுரையில் [illegible] தத்தின் அடுத்த இரு பந்திகளும் அ.ந.க. பற்றிய ஆய்வுக்குப் பயன்படும் கருத்துக்களைக் கொண்டுள்ளன அப்பகுதி இதுதான்:

**வேள்விகளை ஒழித்து ஜீவகாருண்யத்தை நிலைநாட்டிய அன்புருவாகிய இராவணன் ஒளித்திருந்து அம்பு விடநினையாத, சூழ்ச்சி விரும்பாத பெருந்தகைதான் என்று எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை, ஈ.வே.ரா: சோமசுந்தரபாரதி போன்ற பேரறிஞர் தர்க்கரீதியாக ஸ்தாபித்த விஷயங்கள். தயைசெய்து எம்.எஸ்.பி. இன் 'ராவணப் பெரியார்', குடியரசு 'ராமாயணஆராய்ச்சி' இவற்றை வாசிக்கவும். தங்கள் கருத்துக்கள் மடமையானவையென்பதை அப்போது காண்பீர்கள்.**

**பாரதிதாசனது கவிதா மேன்மைகளையும் ஊறிக் கிளம்பும் அதன் சுவைகளையும் துய்ப்பதைவிட்டு அதிலுள்ள குறைகளை மட்டுமே எடுத்துக் கூறுவது சரியான பகுத்தறிவாகாது. குறைகளைக்கூறவேண்டியதே. குணங்களைப் பற்றி ஒரு பேச்சும் பேசாது குற்றங்களைப் பற்றிப் பெரும் பேச்சுப்பேசுவது ஒருவித 'பண்ணுடை மனப்பான்மை' இல்லையா? இர [illegible] மையைச் சற்றும்அறித்திராத யாழ்ப்பாணத்தில் எழுதப்படும் முதலாவது கட்டுரையே அவரைத் தாக்குவதாக இருப்பது தமிழ் இலக்கிய விரிவிற்கும் வியாபகத்திற்கும் ஊறு விளைப்பது. மேலும் தாங்கள் கூறிய குற்றங்களும் அங்ஙனமில்லாது கவியின் குணங்களாக வல்லவா திகழுகின்றன."**

பாரதிதாசனது சிறப்பை 'இரட்டையர்' கூறவில்லையா? என்ற வினு எழுகிறது.

'பாரதியின் இலக்கியப் பரம்பரையில் உதித்த கவிப் பிரமுகர்களுக்குள்ளே பாரதிதாசன் என்ற கனகசுப்புரத்தினத்தை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்... பாரதிதாசனின் அறிவியக்கப் புலமையை மெச்சுகிறோம். சோர்ந்து கிடக்கும் தமிழ்நாட்டைத் துயில் எழுப்பும் அவர் கவிதா சக்தியைப் பாராட்டுகிறோம்' என்ற பீடிகையுடன் தான் இரட்டையர் தமது கட்டுரையை எழுதினர். ஆனல். இது பாரதிதாசனுக்கு நியாயம் செய்ததாகாது என்பதே அ.ந.க. இன்கட்சி

இக்கடிதத்தில் இதுவரை இரட்டையருடனை தமது முரண்பாட்டை அ.ந.க.எடுத்துரைத்ததைக் கண்டோம். கடிதமுடிவில் அவர் இரட்டையரிடம் தமது இரு படைப்புக்கள்பற்றிய கருத்[illegible] வேண்டி நிற்[illegible] காண்கிறோம்.

(வளரும்)

## சாபமிட்டார்.....

(5ஆம்பக்கத்தொடர்ச்சி)
வார். தலைமைஎழுதுவினைஞரிடம் பென்சன் பற்றிப் பலரும் பலவிதமான பிரச்சினைகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். பொறுமையாக எல்லோருக்கும் ஏற்ற வகையில் பதில் கூறினர்.

தமிழ்ச் சட்டம்பியார் தனது பென்சன் வந்துவிட்டதா என்று கேட்டார். தலைமை எழுதுவினைஞர் நன்கு விசாரித்து விட்டு வரவில்லை என்று பதிலிறுத்தார். அவரோ விடாக் கண்டனாக இருந்தார். திரும்பத் திரும்பச் சொல்லியும் அவர் தனது நிலையிலிருந்து இறங்கவில்லை.

தபாலில் அனுப்பினல் ஒரு கிழமைக்கு மேல் செல்லும் என்று தலைமை எழுதுவினைஞர் கூறினர். நாட்டின் நிலைமை காரணமாக வரமாட்டாது என்றர். நீங்கள் ஒரு கிழமைக்குப்பிறகு வாங்கோ என்றும் விளக்கினர்.

இப்ப நாங்கள் வாறது போறது எவ்வளவு கஷ்டம். ஹெலி சூடு, படையினர் கெடுபிடி, வடமராட்சியில் இருந்து அடிக்கடி வரலாமோ. நாங்கள் ஊரில் இருக்க இயலாமல் இருக்கிறது. நீங்கள் விளையாடுகிறீர்கள்;. என்று சத்தமிட்டார்.

நாங்கள் கஷ்டமில்லாமல் கந்தோருக்கு வாற மாதிரிக் கதைக்கிறியள். ஒரு நாள் வாறதற்கு உங்களுக்குப் பயம், நாங்கள் தினமும் வந்துதான் போறம்,என்றர் இவர் விறைப்பாக.

சட்டம்பியார் பொறுமையை இழந்து விட்டார். அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் ஓய்வூதியக் கிளையையே ஒரு கலக்குக் கலக்கியது. "நீரும் என்னைப்போல பென்சன் எடுக்கிறதற்கு நாயாய்அலைவாய்" என்று சாபமிட்டுவிட்டு வெளியேறினர். பென்சன் கிளையில் வேலை செய்வதால் சாபமும் வேண்ட [illegible] நிலையை எண்ணிச் சிரித்தோம்.

## ஆகஸ்ட்---

(4ம் பக்கத் தொடர்ச்சி)
24 முதல் ஜனவரி 30 வரை வியாழன் மீன இராசி. பெப்ரவரி 12 வரை சனீஸ்வரன் விருச்சிக இராசி. பெப்ரவரி 15 வரை இராகு கேதுகள் முறையே மீனம்-கன்னி.

ஒக்டோபர் 24 ஆம் திகதி வரையில் இலங்கை இந்திய உறவுகள் சுமுக நிலையில் இருக்கும். பெருமளவிலான பாதிப்பு இருக்காது. ஓகஸ்ட் 28 ற்கும் ஒக்டோபர் 24 ஆம் திகதிக்கும் இடையில் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வுக்கு வழிகிட்டும். எனினும் தனு இராசிக்கு இராகு வேதை ஸ்தானத்தில் இருப்பதால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போன்றதொரு நிலை உண்டாகும்.

ஒக்டோபர் 24 ஆம் திகதிக்கு இடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடின் டிசம்பர் 5 ஆம் திகதி வரையான காலம் இனப்பிரச்சினை உக்கிரமடையும். அது சார்பான பல பக்க விளைவுகள் உண்டாகும்.

1988 ஜனவரி 30 ஆம் திகதியின் பின்னர் இலங்கை அரசியலில் புயல் ஓய்ந்தது போன்ற [illegible] எனினும் ஆங்காங்கே [illegible] செய்யும்.

## நமது தமிழ்..

(5-ம் பக்கத்தொடர்ச்சி)
தியா இராணுவ ரீதியில் தலையிட வேண்டிவரும் என்று இந்திரா எச்சரித்தார்.

**இஸ்ரேலிய உதவி**

இதைத் தொடர்ந்து இங்கிலாந்தின் 1947ஆம் ஆண்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க இலங்கை முயன்று தோல்விகண்டது. அமெரிக்காவின் நேரடி உதவி பெறமுயன்று விரக்தி அடைந்தது.

இந்த நிலையில் இஸ்ரேலியரிடம் இலங்கை அரசு தஞ்சமடைந்தது.

போராளிகள் தாக்குதல் மேற்கொள்ளும் போது பொதுமக்களை அரசபடைகள் தாக்குவது (Collective Punishment)இதனல் போராளிகளை மக்களிடம் இருந்து தனிமைப் படுத்துவதும், நிலம் வேண்டும் மக்கள் அல்ல என்பதும், பேரின வாதக் குடியேற்றம்மூலம் கைப்பற்றல் (Conquest by Settlement),

—என்பன இஸ்ரேலியர் இலங்கை அரசுக்குச் சொல்லிக்கொடுத்துள்ள தந்திரங்களாகும்.

பேச்சுவார்த்தையும், போராட்டமும் முரண் நிலைகள் அல்ல. சாதகமான உள்ளூர், சர்வதேச சூழ்நிலை நிலவுமானல், அரசு ஒருகாத்திரமான அரசியல் தீர்வை முன்வைக்குமாயின், தீவிர போராட்டகாலத்திலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது ஆரோக்கியமான செயற்பாடாகும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொலைக் குற்றவாளியை நிர்ணயிக்க அடுக்களை "ஹுக்" கைகொடுத்த கதை

## சதாசிவம் கொலை வழக்கு

"திருமதி. சதாசிவத்தின் கழுத்தை நெரித்த தனது எஜமானர் பின்னர் தனது காலினால் ஓங்கிக் கழுத்தைக் குத்தினார். இதனால் திருமதி சதாசிவத்தின் குரல்வளை நொருங்கியது. அது நொருங்கிய சத்தம் எனக்குக் கேட்டது"—இப்படி வில்லியம் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தான்.

"திருமதி சதாசிவம் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மேலும் அவரது குரல்வளை நொருங்கியதிலும் சந்தேகம் இல்லை. ஆனால் குரல்வளை நொருங்கிய சத்தம் அருகில் இருந்த ஒருவருக்குக் கேட்டிருக்க முடியுமா?" —இவ்வாறு கேள்வி எழுப்பினார் சேர். ஸ்மித்.

ஆனால் வெறுங்காலால் திருமதி சதாசிவத்தின்கழுத்தை ஒருவர்ஓங்கிக் குத்தியிருந்தால்

**அங்கம் (4)**

குரல்வளை நொருங்கியதை அவரினால் உணர்ந்திருக்கமுடியும் என்றும் சேர்.ஸ்மித் கூறினார்.

அவரது இந்த நிபுணத்துவ சாட்சியம் ஜூரர்கள் மனதில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

திரு. சதாசிவம், தனது மனைவியின் கழுத்தை நெரித்து, பின்னர் காலால் ஓங்கிக் குத்திக் குரல்வளையை நொருங்கச் செய்திருந்தால் அந்தச் சத்தம் அருகில் நின்ற வில்லியத்திற்குக் கேட்டிருக்க முடியாது.

ஆனால் குரல்வளை நொருங்கியது தனக்குத் தெரியும் என அவன் அடித்துக்கூறுகிறான்.

கொலையின்போது குரல்வளை நொருங்கியது பற்றிய அறிவு அல்லது உணர்வுவில்லியத்திற்குக் கிடைத்திருக்கிறது.

நொருங்கியதைச் சத்தத்தில் கேட்கமுடியாது; நேரடியாகக் கழுத்தைக் காலினால் குத்தியதன் மூலமே உணரமுடியும் என்கிறார் நிபுணர்.

ஆகவேவில்லியத்திற்கு குரல்வளை நொருங்கியது எப்படித் தெரிந்தது?— இப்படி ஜூரர்கள் முன்னிலையில் கேள்வி எழுப்பப்பட்டபோது ஜூரர்கள் மனதில் கொலையாளி என்ற சந்தேகம் சதாசிவம் பக்கத்திலிருந்து வில்லியம் பக்கத்திற்குத்திரும்பியது.

### கொலை நிகழ்ந்த இடம்

திருமதி சதாசிவத்தின் சடலம் கிடந்த கராஜ் பகுதியோடு சேர்ந்தே வீட்டின் சமையலறையும் அமைந்திருந்தது.

கொலை நடந்த பகுதியில் பூர்வாங்க சோதனைகளை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் டி.சேரம் சமையலறையின் நிலத்தில் தேங்காய்த் தும்புகளும் ஒருவித கறுப்பு நிறத் தூளும் நிலத்தில் பரந்து கிடந்ததைக் கண்டார்.

இந்தத் தூளும் சிறிய தேங்காய்த் தும்புகளும் திருமதி சதாசிவத்தின் சடலத்தில் அடிப்பாதத்தில் அப்படியே கிடந்தன.

அது மட்டுமல்லாமல், திருமதி சதாசிவத்தின் கழுத்துப் பகுதியில் கொலையாளி காலினால் ஓங்கிக் குத்தியதால் தாடையிலும் கழுத்திலும் ஏற்பட்டதாகக் கருதப்படும் காயத்திலும் இந்தத்தூளும், தேங்காய்த் தும்புகளும் அப்படியே காணப்பட்டன. இதனை டாக்டர் டி. சேரம் தமது பூர்வாங்க சோதனை பற்றிய அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

திருமதி சதாசிவத்தின் காலில் காணப்பட்ட கறுப்பு நிறத் தூளும், தேங்காய்த் தும்புகளும் அவர்கொலை

> **கழுத்தை ஓங்கிக் காலால் குத்துபவருக்குக் குரல்வளை நொருங்குவதை உணரமுடியும். ஆனால் அருகில் நிற்பவருக்கு நொருங்கும் சத்தம் கேட்குமா?**

செய்யப்பட்டபோது சமையறையில்தான் இருந்தார் என்பதை உறுதிசெய்கின்றன.

வில்லியம் கூறுவது போல, கொலை, மாடி அறையில் நடந்திருக்க முடியாது. மாடியில் நடந்ததாயின் சமையலறையில் இருந்த கறுப்புத் தூளும், தேங்காய்த் தும்புகளும் மாடி அறையில் இருந்த திருமதி சதாசிவத்தின் அடிப்பாதத்தில் வந்திருக்க முடியாது.

திருமதி சதாசிவம் சமையலறையில் இருந்து மாடிக்குப் போகுமுன்னரே மாடிப்படிகளில் அவை காலை விட்டு அகன்றுபோயிருக்கும்.

மேலும் வில்லியம் கூறியதுபோல மாடியில் கொலை நடந்திருந்தால் கொலைக்குப் பின்னர் திருமதி சதாசிவத்தின் காலில் இந்த மிச்சங்கள் வருவதற்கும் வாய்ப்பில்லை—ஏனெனில் வில்லியம் தனது வாக்கு மூலத்தின், சடலம் நிலத்தில் படாதவாறு தன்னாலும் எஜமானராலும் கராஜ்வரை தூக்கி வரப்பட்டதாகக் கூறியிருக்கின்றான்.

ஆகவே கொலைக்கு முன்னர் சமையலறைக்குள் வந்த திருமதி சதாசிவம் அதற்குப் பின்னர் உயிருடன் சமையலறையை விட்டு வெளியே



சிட்னி சிமித்

போகவில்லை.

அடுத்து, கழுத்துத் தாடையில் உள்ள காயத்தில் காணப்பட்ட தேங்காய்த்தும்புகளும், கறுப்புத்தூளும் கழுத்தைக் காலினால் குத்தியகொலையாளியும் சமையலறைக்குள்ளேயே நின்றிருக்கிறான் என்பதை ஊர்ஜிதப்படுத்துகிறது. அவனதுகாலில்இருந்தமிச்சங்களே காயத்தில் காணப்பட்டிருக்கின்றன.

வில்லியம் கூறியது போல, மாடியில்வைத்து திரு. சதாசிவம் தனது காலினால் திருமதி. சதாசிவத்தின் கழுத்தை ஓங்கிக் குத்தியிருந்தால் இந்த எச்சங்கள் காயத்தில் வருவதற்கு வாய்ப்பில்லை.

—இப்படி விளக்கமளித்தார் சேர். சிட்னி ஸ்மித்.

### "ஹுக்" தந்த தாக்கம்

மேலும் அவர் கூறுகிறார்:-

பிரேத பரிசோதனை அறிக்கையின்படி திருமதி சதாசிவத்தின் உடலின் மேல் பிற்பக்கத்தில் இரண்டு கண்டல் காயங்கள் காணப்படுகின்றன.

ஒன்று தலையில் வலப்பக்கத்தில். மற்றையது இரு தோள் பட்டைகளுக்கும் நடுவில்.

இக்காயங்களின் அளவு, தன்மை ஆகியவை குறித்து பிரேத பரிசோதனையில் தரப்பட்ட தகவல்களை ஆராய்ந்தேன்.

திருமதி சதாசிவம் தள்ளப்பட்டு, நிலத்தில் வீழ்த்தப்பட்ட போது இந்தக் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நான் அதனை ஏற்கவில்லை.

முதலாவது காயம் தடிபோன்ற ஏதோ ஒரு மட்டமான பொருள் அடிபட்டதால் ஏற்பட்டிருக்க வேண்டும்.

மற்றைய காயம் மெல்லிய அல்லது கூரிய பொருள் ஒன்றோடு சேர்த்து உடலை அமுக்கியதால் ஏற்பட்டிருக்க வேண்டும்.

அரச தரப்புக் கூறியது போல திருமதி சதாசிவம் நிலத்தில் வீழ்த்தப்பட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தால் நிலத்தில் காணப்படும் கல் போன்ற ஒரு கூரிய பொருளினால் இந்தக் காயம் ஏற்பட்டிருக்க முடியும்.

ஆனால் மேல்மாடியில் கல் ஏதும் காணப்படுவதற்குச் சாத்தியமில்லை,

— இப்படி சேர் ஸ்மித நீதிமன்றில் கூறினார்.

அவர் அடுத்துக் கூறிய விடயம் நீதியரசா கிறேஷியனையே திகைக்க வைத்தது.

"இந்த வழக்கில் சாட்

## சட்டத்துறையில் மருத்துவ இயல்

சியமளிப்பதற்காக கொழும்பு விமான நிலையத்தில் நான் வந்து இறங்கிய போது சட்டத்தரணி கொல்வின் ஆர். டி. சில்வா அங்கு என்னை வரவேற்றார்.

"கொலை நிகழ்ந்த வீட்டையும், இடத்தையும், சமையலறையையும் நேரடியாகப்பரிசோதனை

**-- தமிழில் தருபவர் வித்தி --**

செய்தீர்களா?" என நான் விமான நிலையத்தில் வைத்து கொல்வின் ஆர். டி. சில்வாவிடம் கேட்டேன். அவர் இல்லை என்று கூறினார்.

"விமான நிலையத்திலிருந்து ஹோட்டலுக்குப் போக முன்னர் அந்த வீட்டைப் பார்வையிட முடியுமா?" என கொல்வினிடம் நான் கேட்டேன்.

அவர், அது மிகச் சுலபம் எனக் கூறி அந்த வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார்.

கொலை நடந்து சுமார் ஒருவருட காலத்தின் பின் அந்த வீட்டுக்கு நான் சென்றேன்.

வீடு, கைமாறியிருந்தது. வீட்டைப் பார்வை



சதாசிவம் தம்பதயினா

யிட்டேன். துருவிச் சோதித்தேன். என்னே ஆச்சரியம்! என்ன இருக்கும் என நான் எதிர்பார்த்தேனே அது அப்படியே இருந்தது.

திருமதி சதாசிவத்தின் உடலின் பிற்பக்கத்தில், எந்த உயரத்தில் அந்த இரண்டாவது காயம் காணப்பட்டதோ அதே உயரத்தில் கூரிய 'ஹுக்' ஒன்று சமையலறைச் சுவரில், இன்னும் அப்படியே இருந்தது.

அந்த ஹுக்கில்தான் சமையலறைக் கதவைத் திறந்து அது அடிபடாமல் கொளுவுவது வழக்கம்.

திருமதி-சதாசிவத்தை சமையலறையில் சுவரோடு சேர்த்து வைத்து நசித்துகழுத்தைநெரித்த போதே இந்த 'ஹுக்'கினால் அந்தக் காயம் அவரது முதுகில் ஏற்பட்டிருக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

—இப்படி சேர் ஸ்மித் கூறிய போது தான் நீதியரசர் கிறேஷியனின் மனதில் ஒன்று உறைத்தது.

அரசதரப்பில் நிபுணத்துவ சாட்சியமளிக்க வந்த யாரும்— சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் டி. சேரம் தவிர்ந்த எவரும்— கொலைநடந்தவீட்டை எந்தச் சந்தர்ப்பத்திலும் பார்வையிடவோ அல்லது சோதனை செய்யவோ இல்லை என்பதுதான் அது.

தான் கூட, கொலை நிகழ்ந்ததாக அரச தரப்பில் கூறப்பட்ட ட்டிலை, நீதிமன்றிற்கு கொண்டுவரச்செய்தே பார்வையிட்டதாக நீதியரசர் மனஉறைப்புடன் கூறினார்.

★ ★ ★

சேர் சிட்னி ஸ்மித் தமது சாட்சியத்தின் நடுவில், கொலை தொடர்பாக தமக்குத்தரப்பட்ட மருத்துவத் தகவல்களை வைத்துக்கொண்டு கொலை இப்படித்தான் நடந்திருக்க முடியும் என்பதை பூடகமாக -ஆதாரங்களோடு வெளிப்படுத்தினார்.

சதாசிவத்திற்கு எதிராக வில்லியம் தெரிவித்த சாட்சியங்களின் பல பகுதிகளும் சேர் ஸ்மித்தின் நிபுணத்துவ சாட்சியத்தினால் உடைத்தாயிற்று.

அப்படியானால் கொலையைச் செய்தவர் யார்? சதாசிவமா அல்லது வில்லியமா? யார் உண்மையான குற்றவாளி? சேர் ஸ்மித்தின் சாட்சியப்படி கொலைக் குற்றவாளி யார்?

சேர் ஸ்மித்தின் விளக்கங்களோடு, அது பற்றிய தகவலை அடுத்த இதழில் பார்ப்போம்.

-(வளரும்

# சாதனை படைத்த வீராங்கனை உஷா இந்தியாவுக்குப் பெற்றுத் தந்த புகழ்

நூறில் ஒரு செக்கன்- இதன் பெறுமதி எமக்கு மிகசாதாரணம். ஆனால் இந்தியாவின் ஓட்ட வீராங்கனை பி.ரி உஷாவிற்கு இதன் பெறுமதி மிகமிக அதிகம். இந்த மிகக்குறுகிய 0.01 செக்நேர வித்தியாசத்தில்தான்உஷா 1984ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பதக்கம்பெறும் வாய்ப்பை இழந்தார்.

ஆனால் அவர் இந்தத் தோல்வியால் மனம் சலிக்காமல் தோல்வியே வெற்றியின் ஆரம்பம் என்ற தாரக மந்திரப்படி அடுத்த ஒலிம்பிக் போட்டிக்கு முகம் கொடுப்பதாகக் கடுமையாகப் பயிற்சி பெற்று வருகிறார்.

இந்தியாவில் எத்தனையோ ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்கள் இருந்தும் இந்தியா ஒலிம்பிக்கில்பதக்கங்களை வெல்வது மிகவும் அரிதாகவே உள்ளது.

இந்தியாவுக்காக சிறப்பான விளையாட்டு வீரர்களுள்ஒருவரான மில்கா சிங்கிற்கு பிறகு இந்தியாவின் பெயரை மெய்வல்லுனர் உலகில் பொறிக்க முயன்றுவரும் ஒரு வீராங்கனைதான் பி. ரி. உஷா. இந்தியாவின் கேரள மாநிலத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது காரிகைதான் அவர். இந்திய ரயில்வேயில் உத்தியோகத்தராகப் பணியாற்றி வருகிறார்.

1978 ஆம் ஆண்டு இந்திய மாநிலங்களுக்கிடையில் நடத்தப்படும் கனிஷ்ட பிரிவுக்கான போட்டியில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் 13.3 செக்கனில் ஓடிமுடித்து அறிமுகமான போது அவருக்கு வயது 14.

தொடர்ந்து மாநிலங்களுக்கிடையேயான போட்டிகளிலும், இந்திய திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்படும் போட்டிகளிலும் உள்ளூர் மட்டத்தில் சாதனை புரிந்த இவரை சர்வதேச அரங்கில் முதலாவதாக அறிமுகம் செய்தது, 1982 டெல்லி ஏசியாட்.

ஏசியாட்டில் இவரால் எதிர்பார்த்த அளவு



✶ வீராங்கனை உஷா ✶

சோபிக்கமுடியவில்லை.

ஆனாலும் 1984 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் சாதனைபடைக்க முயன்று துர்அதிஷ்டவசமாக .01 செக்கனால் 400 மீற்றர் தடைத்தாண்டலில் பதக்கம் பெறும் வாய்ப்பை இழந்தார்.

1986 ஆம் ஆண்டு சோலில் நடைபெற்ற ஏசியாட்டில் 4 தங்கப் பதக்கங்களையும் 1 வெள்ளிப் பதக்கத்தையும் வென்று அடுத்த ஆண்டு சோலில்நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் தன்னோடு போட்டியிட இருக்கும் மற்றைய வீராங்கனைகளுக்கு அறை கூவல் விடுத்துள்ளார்.

அடுத்த ஒலிம்பிக்கில் எப்படியும் ஒரு பதக்கத்தைப் பெறுவது என்று முயன்றுவரும் உஷா தன்னுடைய பிரியமான 400 மீற்றர் தடைதாண்டலில் தொடர்ந்து வெற்றிபெற்று வருகின்ற போதும் ஓட்ட நேரம் அதிகமாகிவருவதை கணக்கில்கொள்ள வேண்டும். அல்லதுபோனால் அடுத்துவரும் ஒலிம்பிக்கிலும் வெற்றிபெறுவது அசாத்தியமாகிவிடும்.

1984 லொஸ் ஏஞ்சல்சில் 400 மீற்றர் தடைத்தாண்டலில் நாலாவது இடம் பெற்ற போது அவர் அந்தத் தடையை தாண்ட எடுத்த நேரம் 55·42 செக்கன்கள்.

1986 சோலில் ஏசியாட்டில் தங்கப் பதக்கத்தை வெல்வதற்கு 56.08 செக்கன்கள் தடை தாண்டி ஓட வேண்டி இருந்தது.

ஆனால் அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற மாநிலங்களுக்கான போட்டியொன்றில் முதலாமிடத்தை

## விளையாட்டு விமர்சனம்

வென்ற போதும் 58.7 செக்கன்கள் எடுத்துள்ளார்.

வெவ்வேறு நாடுகளில் வித்தியாசமான கால நிலைகளில் உள்ள ஓடு பாதைகளில் ஓடுவதற்கு எடுக்கப்பட்ட நேரக் கணிப்பீடுகளை நாம் ஒப்பிடுவது நியாயமில்லா விடினும் பி. ரி. உஷாவின் ஆசை நிறைவேற அவர் இன்னும் கடுமையான பயிற்சி பெறுவது அவசியம்.

### டேவிஸ் கிண்ணம்

இவ்வார இறுதியில் டேவிஸ் கிண்ணத்திற்கான கால் இறுதி ஆட்டத்தில் இந்தியாவும் இஸரேலும் மோத உள்ளன.

இந்த ஆட்டங்கள் இந்தியத் தலைநகரான புதுடில்லியில் முஸ்லிம் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் பலத்த பாதுகாப்புடன் நடைபெற உள்ளன. இந்த ஆட்டங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அதிரடிப்படைகள் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளன.

கடந்த சிலநாட்களாக இந்தியா இஸ்ரேலுக்கு எதிரான இந்த ஆட்டங்களைப் பகிஷ்கரிக்கும் என்று எதிர்பார்த்து இருந்த வேளையில் இந்த ஆட்டங்களை நடத்த ராஜீவ் காந்தி அனுமதியளித்தது இந்திய ராஜதந்திர வட்டாரங்களில் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு வெளிப்படையாக ஆதரவு அளித்து வரும் இந்தியாவின் தற்போதைய போக்கு அவர்களுக்கும்

**-- ஈசன் --**

இந்தியாவுக்கும் இடையில் பாரிய இடைவெளி ஒன்றை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

டில்லியில் நடைபெறும் டேவிஸ் கிண்ண ஆட்டத்திற்கு 1200 பார்வையாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளனர்கள். அதிரடிப் படையின் பாதுகாவலுடன் குறிப்பிட்ட சில பார்வையாளர்களுடன் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நடத்தப்படும் இப் போட்டியில் யார் வெல்வார்கள் என்பது இவ் வார இறுதியில் தெரிந்து விடும். ★

# ஈழத்துப் பெண்---

(3 ம்-பக்கத் தொடர்ச்சி)

எழுந்த இயக்கமே பெண்ணிலைவாதம். மேலைநாடுகளில் 'வுமின் லிபரேஷன்' என்ற பெயரில் செய்யப்படும் செயல்களை அப்படியே எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், நமது தமிழ்ப் பெண்ணினத்தின் நிலை, கல்வி, வேலைவாய்ப்பு போன்ற சிலதுறைகளில் குறிப்பிடக்கூடியளவு முன்னேற்றம் கண்டுள்ள போதிலும் 'சீதனம்' என்ற கொடிய அரக்கனின் பிடி அச்சுறுத்தியபடியே இருப்பது மறைக்கமுடியாதது. இதனை எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டியது மிக முக்கியம்.

கேள்வி:-எழுத்துலகில் உங்களால் மறக்கமுடியாத நினைவுகள் ஏதாவது...?

பத்மா:- 1952 அளவில் என நினைக்கிறேன். சுதந்திரன் பத்திரிகை நடத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் எனக்கு முதலாவது பரிசுகிடைத்தது. இதன்மூலம் ஈழத்தில் நடைபெற்ற சிறுகதைப்போட்டியில் முதற்பரிசுபெற்றமுதலாவது பெண் எழுத்தாளர் என்ற பெருமை எனக்குக்கிடைத்தது.

### ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள்

கேள்வி:-தமிழகப்பெண் எழுத்தாளர்களைப்போல ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் அதிகதூரம் எழுத்துத்துறையில் முன்னேறவில்லையெனக் கருதுகின்றேன். தங்கள் கருத்து?

பத்மா:- தமிழகத்தில் எழுத்துத் துறையில் ஆரம்பத்தில் ஈடுபட்டவர்கள் பெரிய இடத்துப் பெண்கள்தான் என்பதை நினைவுகொள்ள வேண்டும். பெரிய இடத்துச் செல்வாக்கு அவர்களைப் புகழேணியில் தூக்கிவிட [illegible] உதவின. [illegible] லக்ஷமி போன்றோரின் படைப்புக்களைத் தவிர, பல பெண் எழுத்தாளரின் பெயருக்குப் பின்னால் ஆண் எழுத்தாளர்களும் ஒளிந்து கொண்டு எழுதி வந்தமை ரகசியமானதல்ல.

அண்மைக் காலத்தில் பெண் எழுத்தாளர் அங்கு ஆர்வமாக ஈடுபட்டு எழுதுகிறார்கள் என்பது உண்மை. விரைவில் பிரபல்யமாகி [illegible] பதற்காக "நியூவேவ்" [illegible] தமிழ்ப்பட [illegible] னங்களை ஒத்த கதைகளைத்தானே பெரும்பாலோர்எழுதுகிறார்கள்.

எமது நாட்டின் எழுத்தாளர்களின் ஆழமான சமூகப் பார்வை அவர்களின் கதைகளில்காண முடிகின்றது. எமது நாட்டின் யோகா பாலச்சந்திரன், கோகிலா மகேந்திரன், குறமகள், யாழ்நங்கை, தாமரைச் செல்வி போன்ற பண்பட்ட எழுத்தாளர்களுடன் சந்திரா தியாகராசா, ஜனகமகள் சிவஞானம் போன்ற புதிய எழுத்தாளர் தலைமுறை ஒன்று வேகமாக வளர்ந்துகொண்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

### வாழ்த்து

கேள்வி:- நன்றி - சஞ்சீவி வாசகர்களுக்கு என்ன சொல்லப்போகிறீர்கள்...?

பத்மா:-சஞ்சீவி,புதிய பத்திரிகைஎன்றுசொல்ல முடியாதளவு ஆசிரிய குழாத்தின் அயராத உழைப்பு, அனுபவத்தால் பல்துறைத் தகவல்களைக் கொண்டதொரு குடும்பப் பத்திரிகையாகிவிட்டமை பெரிய சாதனையே. ஆரம்பத்தில் இலக்கியத் துறைக்குப்போதிய இடமளிக்கப்படாதிருந்த குறையையும் அது இன்று நிவிர்த்தி செய்துகொண்டிருப்பது வரவேற்கத் தக்கதே.

பூத்து வரப்போகும் புதுயுகத்துக்கு எழுச்சி கீதம் இசைக்கும் சஞ்சீவி, என்றும் சிரஞ்சீவியாக நிலைத்திட வாசகர்களுடன் சேர்ந்து நானும் வாழ்த்துகின்றேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதன தத்துவம்

'டன்'கணக்கில் பேசப்படும் கொள்கைகளைக் காட்டிலும் ''ஒரு அவுன்ஸ்'' நடைமுறைப் பயிற்சி மிகவும் நல்லது.

- சுவாமி சிவானந்தர்.

சம்பூர்ண சலவைக்கு நுரைவளம்கூடிய மில்க்வைற் நீலசோப்பை வாங்கிஉபயோகியுங்கள் புதிய விலை ரூபா 2-50 சதம் மட்டுமே 10 மேலுறைகளை அனுப்பி சுவாமி சிவானந்தரின் சிறிய போதனைகள் அல்லது அழகிய ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

25 - 07 - 1987 சனிக்கிழமை



''உனது நெஞ்சுக்குத் துரோகம் செய்யாதே மனச்சாட்சியின்படி நட, நிச்சயமாகவே வெற்றி உண்டாகும்''-ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடர் பாவியுங்கள் பாவித்த......

10 - 50 கிரு. சிறிய வெற்றுப் பைகளை அனுப்பி அழகிய ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஸ்ரிக்கரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


# ஈழக் கோரிக்கையை இந்தியா ஏற்கச் செய்வோம் -பிரபா

யாழ்ப்பாணம், ஜூலை 25

வேறு வழியின்றி தமிழ் ஈழக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நாம் இந்தியாவுக்குக் கொடுப்போம்.

ஜெயவர்த்தனாவின் உண்மைச் சொரூபத்தை வெளிக் காட்டுவதன் மூலம் இதை ஏற்படுத்துவோம்.

நேற்று இந்தியா புறப்படுவதற்குச் சற்று முன் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழீழம் கோரிக்கையை இந்தியா இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏன்? வடக்கு, கிழக்கு இணைந்த மாநில அமைப்பையே சில காலத்துக்கு முன்னர் இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்போது தான் வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலம் என்ற யோசனையை இந்தியா ஆதரிக்கின்றது.

நாம் உறுதியாக இருப்போமானால் வேறுவழியில்லாமல் தமிழீழம் கோரிக்கையை இந்தியா ஏற்கும் சந்தர்ப்பம் ஏற்படும்.

ஒருமுறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் என்னைப் பார்த்து தமிழீழம் கோரிக்கையை கைவிடும்படி கேட்டார். அதற்குப் பின்னர் பேச்சுக்களில் கலந்து கொள்ளும்படி கூறினார்.

முடியாது - என்று உறுதியாகப் பதில் அளித்தோம்.

இந்தியாவினால் அங்கீகரிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியே தமிழ் ஈழம் கொள்கையைக் கைவிடாமல் பேச்சுக்களில் கலந்து கொள்கின்றது.

அப்படியானால் நாம் ஏன் கைவிட்டுப் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டும்; என்று கேட்டோம்.

இன்று நான் அழைத்துச் செல்லப்படுவது ஒரு நிகழ்வே.

இது எனக்கு அளிக்கப்பட்ட கௌரவம் அல்ல. தமிழீழ மக்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகவே கருதுகின்றேன்.

இப்போராட்டத்தில் எமது போராளிகள் 615 பேர் உயிரிழந்தனர் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரை இழந்தனர்.

இத்தியாகத்திற்குக் கிடைத்த பெருமையாகவே இதனைக் கருதுகின்றேன்.

நான் ஒரு பிடிவாதக்காரன் அப்படிப் பிடிவாதமாக இருந்தபடியால்தான் இன்று இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

நான் மனச்சாட்சியை விற்கவிரும்பவில்லை.

நான் விரும்பியிருந்தால் பெங்களூர்ப் பேச்சுக்களோடு முதலமைச்சராக வந்திருப்பேன்.

எனக்கு இறப்பு சாதாரண விஷயம்.

நான்தான் முதலில் கழுத்தில் சயனைட் வில்லையைக் கட்டினேன். அதன் பின்னர் தான் மற்றவரின் கழுத்தில் கட்டினேன்.

முதலமைச்சர் பதவிக்கு நான் ஆசைப்படவில்லை தமிழ் மக்கள் நிம்மதியான, உறுதியான வாழ்வுக்கே நான் ஆசைப்படுகின்றேன்

என்னை மீண்டும் யாழ்ப்பாணம் கொண்டு வந்து விடும் பொறுப்பை இன்றில் இருந்து இந்திய அரசே ஏற்றுள்ளது.

பத்திரிகையாளர் சந்திப்பில் திரு. பிரபாகரன் இதனை வெளியிட்டார்.

சென்னையில் இருந்து பெங்களூருக்கு தனி விமானம் மூலம் நீங்கள் அழைத்துச் செல்லப்பட்ட விதத்துக்கும் இப்போது நீங்கள் அழைத்துச் செல்லப்படும் முறை பற்றியும் ஏதும் கூற உள்ளதா?

-இப்படி உதயன் செய்தியாளர் கேட்டார். திரு. பிரபாகரன் பதிலளிக்கையில்-

பெங்களூரில் இருந்து நேர்வழியில் (அதாவது உரிய முறைப்படி) நான் அழைத்துச் செல்லப்படவில்லை.

இம்முறை இங்கிருந்து அங்கீகரிக்கப்பட்ட நிலையில் சட்டபூர்வமாக நான் அழைத்துச் செல்லப்படுகின்றேன்.

கேள்வி: பிரதமர் காந்தியுடனான பேச்சுக்களை முடித்துக்கொண்டு எப்போது யாழ் திரும்புவீர்கள்?

பிரபா: அங்குள்ள நிலைமையைப் பொறுத்தே யாழ் திரும்புவேன்.

முப்பது ஆண்டுகளாக இழுபறிப்பட்டு வந்த பிரச்சினைக்கு மூன்று நாட்களில் தீர்வு காண விடமுடியுமா?

திரு. ஜெயவர்த்தனாவின் உண்மைச் சொரூபத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும். அதுதான் இப்போது செய்ய வேண்டியது,

வடமராட்சித் தாக்குதலைத்தொடர்ந்து நிறுவப்பட்டுள்ள புதிய இராணுவ முகாம்களை இலங்கை அரசு விலக்கிக்கொள்ள வேண்டும்

பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு நாம் விதித்துள்ள நிபந்தனை இது.

இந்த நிபந்தனையை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளுமா? என்பதை என்னால் சொல்ல முடியாது.

இந்த ஒரு நிபந்தனையை நிறைவேற்றியபின்னர்தான் மற்ற விடயங்களை நாம் ஆராய முடியும்.

நான் சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு திரும்பியபோது ஓர் உறுதியுடன் வந்தேன்.

தமிழ்மக்களின் உண்மையான பிரதிநிதியாக செல்லவேண்டும்என்பதே அந்த உறுதி.

அந்த உறுதி இன்று நிறைவேறுகின்றது.

தமிழீழ மக்களின் விருப்பத்துக்கு மாறான எந்தத் தீர்வையும் நாம் ஏற்க மாட்டோம்.

பேச்சுக்கள் என்ற பெயரில் இதுவரை ஏமாற்றப்பட்டுவந்தோம்.

மீண்டும். ஏமாற நாம் தயாராக இல்லை

இவ்வளவு தியாகங்களின் பின்னர் 1957 யோசனைக்குத்தான் நாம் செல்லவேண்டுமா?

இப்படி அவர் தெரிவித்தார்.

(இவற்றில் சில அம்சங்கள் நேற்றைய எமது விசேட பதிப்பில் வெளியாகி இருந்தன.)

(உ-எ)

## யாழ் பத்திரிகைகளை பாராட்டினார் 'பிரபா'

யாழ்ப்பாணம் ஜூலை 25

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று உண்மைகளை வெளிக்கொணருவதில் யாழ். தமிழ்ப் பத்திரிகைகள் ஆற்றும் பணி போற்றுதற்குரியது.

-இப்படி யாழ் தமிழ் பத்திரிகைகள் பற்றிக் கருத்து வெளியிடுகையில் திரு. பிரபாகரன் தெரிவித்தார்.

யாழ் திரும்பிய பின்னர் யாழ் தமிழ்ப் பத்திரிகையாளர்களைச் சந்திக்கவில்லை என்ற குறை இருந்து வந்தது.

நான் இந்தியா செல்லும் முன்னர் சந்திக்க விரும்பினேன். அதனால் தான் இச்சந்திப்பு ஒழுங்குசெய்யப்பட்டது.

-இப்படி திரு. பிரபாகரன் சொன்னார். (உ-எ)

## தேரர்கள் எதிர்ப்பு

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு அஸ்கிரிய பீடாதிபதி பலிபான சந்தானந்த தேரர், அமரபுர சங்க சபாவின் தலைவர் வண. மதிகே பஞ்ஞசீஹ தேரர் கூட்டாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

இது சம்பந்தமாக ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை இவர்கள் எழுதி இருக்கின்றார்கள்.

(உ-எ)

## கோர்பச்சேவின் ஆலோசனை!

ஜாகார்த்தா, ஜூலை 25

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் போது புதுப் பிரச்சினைகள் தோன்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

-இப்படி சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

இந்தோனேஷியப் பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் சோவியத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

(உ-எ)

## பகிஷ்கரிப்பு

தனியார் மருத்துவ கல்லூரியின் அங்கீகாரத்தை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளைபகிஷ்கரித்தனர்.

இது தொடர்பாக நேற்றுக்காலை 9-00மணியளவில் கைலாசபதி அரங்கில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (உ)

## சிறப்பான யோசனையாம்

புதுடில்லி, ஜூலை 25

டிசம்பர் 19 யோசனையை விட இலங்கை அரசு புதிதாகச் சமர்ப்பித்துள்ள யோசனைகள் நிச்சயம் சிறப்பானவை.

புதுடில்லி வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்று செய்தியாளர்களிடம் இப்படித் தெரிவித்தார். (உ-எ)

## பாராட்டு விழா

தொல்புரம் அ.மி.த.க பாடசாலை அதிபர் திரு. க. தர்மரத்தினம் சேவையில் இருந்து இளைப்பாறியதை முன்னிட்டு இன்று 25ம் ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணியளவில் பாடசாலை அதிபர் திரு. ச. சனசலிங்கம் தலைமையில் சேவைநலம் பாராட்டு விழா நடைபெறுகின்றது. (உ-161)

## நாட்டை..

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கிழக்கை பிரித்துக் கொடுத்து விடுவோம் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள்.

தீவிரவாதிகளின் அடுத்த தாக்குதல் நாட்டின் ஏனைய பகுதிகளைப் பிடிப்பதாகத்தான் இருக்கும்.

பாக்கு நீரிணைக்கு அப்பால் இருந்து வடக்கு - கிழக்கை பிடிக்கத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துகின்றனர்.

அவர்களிடம் வடக்கு, கிழக்கை ஒப்படைத்தால் அங்கு இருந்து கொண்டு நாட்டின் ஏனைய பகுதிகளை பிடிக்க முயலமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

—இப்படி பிரதமர் கேட்டார். (உ-எ)

## பிரபா..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மூலம் புதுடில்லிக்கும் அவர் சென்றார்.

சென்னையிலிருந்து அவருடன்கூடவே இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றும் புதுடில்லி சென்றார்.

இனப்பிரச்சினைத் தீர்விற்காக இந்திய மத்திய அரசு ஏற்பாடு செய்திருக்கும் பேச்சுக்களில் கலந்துகொள்ளவே பிரபா இந்தியா சென்றிருக்கின்றார். (உ)


COMPUTER PROGRAMMING and DATA PROCESSING COURSE

BASIC LANGUAGE

(6 MONTHS)

✶ Weekend Classes by Qualified Experienced and Dedicated panel

FEES RS. 1,500/-

(தவணை முறையிலும் செலுத்தலாம்)

குளிரூட்டப்பட்ட அறையில் 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத PRACTICALS

வெளிநாடு செல்பவர்களுக்கோர் வரப்பிரசாதம்

ஆரம்பம் 09-08-1987 ஞாயிறு 10 மணி

ICMA, IDPM, AAT, IAB

வகுப்புகளும் நடைபெறுகின்றன

Radio, T. V. & Electronic Engineering Course

7 Months - Weekends

✶ Radio ✶ T. V.
✶ Video Tape Recorder ✶ Audio Tape Recorder
✶ Sterio HI FI Ampilifiers ✶ Record Players

மற்றும் இலத்திரனியற் கருவிகளை எமது நவீன ஆய்வுகூடத்தில் பழுதுபார்க்கும் நுட்பத்தைப் பயின்று கொள்ளலாம்.

எமது பாடத்திட்டம் வேலைவாய்ப்பை இலகுவிற் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது,

லண்டன் தகைமையும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்

Fees - Rs. 2/50- விதம் 6 மாதங்களுக்கு

ஆரம்பம் - 09-08-1987 ஞாயிறு 10 மணி

✶ பாதுகாப்பான இடம் ✶ சான்றிதழ் உண்டு

CANTABIA INSTITUTE

13, Rasavinthodam Lane,

(ஸ்ரான்லி ரோட் முடிவுக்கருகாமையில்)

JAFFNA.



உள்ளும் புறமும் குறுமுனி

நாளைய உதயனில் வெளிவரும்



அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

ஆரம்பிக்கும்

வெளிவாரி பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1988/89

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப் படிப்புக்களுக்கான பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் 7ஆம் திகதி (07.09.87) ஆரம்பமாகின்றன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாகசேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

✶ கலைமாணி (B.A)
✶ வர்த்தகமாணி (B.Co)
✶ விஞ்ஞானமாணி (B Se) (கணிதம்)

விண்ணப்பங்கள் ஒகஸ்ட் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் பெற 'பதிவாளர்'' அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் என்ற பெயருக்கு ரூபா 10 ற்கான காசுக் கட்டளையுடன் 9''X4'' அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை சனி, ஞாயிறு தினங்களில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கருகாமையில்)


## முதல் ஆண்டு நினைவஞ்சலி

திதி: 25 . 07 . 87



5-8-1986 ஆடி அமாவாசைத் தினத்தில் சிவபதமடைந்த

**அமரர் வி. செல்லத்துரை**

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

சீருடன் எம்மை வளர்த்து சிறப்புடன் வாழ்ந்த எமது அன்புத் தந்தையே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓர் ஆண்டாகி விட்டாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலவில்லை.

108, அரசடி வீதி,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.

உங்கள் அன்பு
மனைவி, மக்கள்
உறவினர்கள்


சகலவிதமான ஜவுளித்தெரிவுகளுக்கும் ★ மயூரா சென்ரர் ★ 70, ஸ்ரான்லி வீதி, (ஆர். ஜி. பில்டிங்) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் யாழ்ப்பாணத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர் து அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 25-07-1987.

P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Saturday July 25. 1987